வடக்கு,கிழக்கு பகுதிகளில் 22ம் திகதிக்குப்பின் பூரண அமைதி ஏற்படும் என கலைஞர் நம்பிக்கை

UNIVERSITY OF JAFFNA SRILANKA
RECEIVED
LIBRARY

விலை ரூபா 3-00

ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 மாசி: 07 றஜபு பிறை: 22 இதழ்: 06

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 19-02-1990

(சென்னை)

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இம்மாதம் 22-ம் திகதிக்குப் பின் ஆயுதப் போராட்டம் நின்று அமைதியும் பாதுகாப்பும் நிலவுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று தமிழக முதல்வர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் போராளிகள் அமைப்புக்களுடன் கடந்த மூன்று நாட்களாக தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை நடத்தியபின்னர் சென்னையில் நேற்றுபத்திரிகையாளரிடம் பேசுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போராளிகளுடன் ஏற்பட்ட உடன்பாடு குறித்து கருத்து தெரிவிக்க மறுத்த முதல்வர் வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு மறுதேர்தல் நடத்துவது தமிழ் போராளிகளுக்கிடையில் யுத்தநிறுத்தம் போன்றவற்றில் உடன்பாடு உண்டானதென்பதனை குறிப்பால் உணர்த்தினர்.

ஈ. பி. ஆர். எல். எவ், புளொட், ரெலோ, ஈ. என். டி. எல். எவ் ஆகிய அமைப்புக்களுடன் கூட்டாகவும், ஈரோஸ், எல். ரி. ரி. ஈ. ஆகியவற்றுடன் தனித்தனியாகவும் முதல்வர் பேச்சுக்களை நடத்தினர்.

முதல்வர் கருணாநிதி பத்திரிகையாளர் மத்தியில் மேலும் பேசுகையில் கூறியதாவது.

''ஈழத்தில் மேற்கொண்டு நிலையான அமைதி நிலவ வழி முறைகள் வகுக்கப்படும்.

ஜனநாயக பாதைக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். மாவட்ட தனியார் கல்விநிலையங்கள்

திங்கள், வெள்ளி மூடப்படும்

காலை மாலை வகுப்புகளுக்கு கட்டுப்பாடு

மார்ச் 1-ம்திகதி முதல் அமுல்

[நமது நிருபர் கு. சோமசேகரம்]

யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் நன்மை கருதி மார்ச் முதலாம் திகதி முதல் திங்கள், வெள்ளி ஆகிய இரு நாட்களும் மூடப்படும். கட்டணங்கள் யாவும் சீரமைக்கப்படும்- காலை, மாலை நேரங்களில் வகுப்புக்கள் நடத்துவதற்கு நேரக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரில் நேற்று நடந்த தனியார் கல்வி நிறுவனங்களின் கூட்டத்தில்இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களின் அதிபர்களையும் ஆசிரியர்களையும் உள்ளடக்கிய கூட்டமொன்று நேற்று மாலை யாழ். 'பொன்ட்' கல்வி நிறுவனத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மாணவர்களின் நன்மை கருதி பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

தனியார் கல்விநிலையங்கள் காலை 7-30 மணிக்குப் பின்னர் வகுப்புக்கள் நடத்துவதில்லை என்றும், மாலை வகுப்

(8ம் பகம் பார்க்க)

மண்டபம் முகாமிலுள்ள 2,600 அகதிகள் தாயகம் திரும்புவர்!

(சென்னை)

கடந்த சில வாரங்களாகமண்டபம் முகாமுக்கு வந்து சேர்ந்த தமிழ் அகதிகள் தாம் இலங்கையில் தமது இல்லங்களுக்கு திரும்ப விருப்பம் தெரிவித்திருப்பதாக மாநில தொழிலாளர் நலம் மற்றும் மறுவாழ்வுத்துறை அமைச்சர் திரு. கே. எஸ். நேரு தெரிவித்துள்ளார்.

இராமேஸ்வரம், மண்டபம் முகாம்களுக்கு வந்து சேர்ந்த அகதிகளுக்கு அளிக்கப்படும் வசதி, ஏற்பாடுகளை பார்வையிட வந்தபோது இராமேஸ்வரத்தில் செய்தியாளர்களி

(8ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்தில் மா தட்டுப்பாடு நீங்கும்: களஞ்சியப்படுத்தஏற்பாடு!

(காங்கேசன்துறை)

யாழ். மாவட்டத்துக்கு கப்பல்கள் மூலம் தொடர்ச்சியாக மாவை தருவித்து களஞ்சியப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் தொடர்ச்சியாக மாவை தருவிக்க முடியாமலும், அதனைக் களஞ்சியப்படுத்த முடியாமலும் இருந்தமையால் அடிக்கடி மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. கப்பல்களில் தருவிக்கப்பட்டமா உடனுக்குடன் விநியோகம் செய்யப்பட்டது.

இளிமேலும் இவ்வாறு

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். போதனா வைத்தியசாலை: தற்காலிக ஊழியர்பதவிக்கு 2,000 பேர் விண்ணப்பம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் ஊழியர் பற்றுக் குறை நிலவுவதால் தற்காலிகமாக புதிய ஊழியர்கள் நியமிக்கப்பட இருக்கின்றனர்.

சிற்றூழியர்கள் பற்றுக் குறையை போக்குவதற்காக மேற்படி வைத்தியசாலையில் வேலைசெய்த 48 ஊழியர்களுக்கு தற்போது மூன்று மாத பயிற்சி யாழ். நகரில் நடைபெற்றுவருகின்றது.

இவர்களின் பயிற்சிக்காலம் முடிந்து இவர்களுக்கு வேலை வழங்கும்வரை இவ் ஊழியர்களின் இடங்களுக்கு தற்காலிகமாக புதிய ஊழியர்களை நியமிக்க வெளியார்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இப் பதவிக்கு இரண்டாயிரத்துக்

(8-ம் பக்கம் பார்க்க)

வடமராட்சி கரையோர முகாம்களிலிருந்து அமைதிப்படை வெளியேறியது!

(வடமராட்சி, புலோலி நிருபர்கள்)

வடமராட்சியில் கரையோரப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இந்திய அமைதிப் படை முகாம்கள் யாவும் நேற்று மூடப்பட்டதுடன் அங்கிருந்த படையினரும் வாபஸ் பெற்றுள்ளார்கள்.

பருத்தித்துறை, வியாபாரி மூலை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, வல்லிபுரக்கோயில் போன்ற இடங்களிலுள்ள முகாம்களே நேற்று மூடப்பட்டன.

குறிப்பிட்ட முகாம்களிலிருந்து மூட்டை முடிச்சுகளுடன் டாங்கிகள், ட்ரக்குகள் சகிதம் பலாலி நோக்கி படையினர் புறப்பட்டார்கள்.

உடுப்பிட்டி, யாக்கரு, நெல்லியடி, புலோலி, கலிகை, மணற்காடன், துன்னாலை, நவிண்டில், மந்திகை போன்ற முகாம்களிலிருந்து இன்னும் ஓரிரு தினங்களில் அமைதிப் படையினர் வெளியேறி விடுவார்கள் என்று அமைதிப் படை பிரிகேடியர் ரி. பி. சிங் தெரிவித்தார்.

இந்திய அமைதிப் படையினர் வெளியேறிய பகுதிகள்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

"தற்கொலை, இயற்கை மரணங்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடாது" -கோபி

(கிளிநொச்சி)

''கிராம சேவையாளர்கள் தமது சேவைகளை சரிவரவும் கடமையுணர்வுடனும் செய்ய முன்வரவேண்டும். அனைத்து மக்களையும் ஒரே நோக்கில் பார்ப்பதுடன்பொதுமக்களின் உண்மையான குறைபாடுகளை துரித கெதியில் நிவர்த்திக்க ஆவன செய்யவேண்டும்.''

இவ்வாறு கிளிநொச்சிஉதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற கிராம சேவை அலுவலர்கள் கூட்டத்தில் உரையாற்றுகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கோபி கூறினர்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. வேலுப்பிள்ளை உட்பட சகல பிரிவுகளின் கிராமசேவையாளர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

புலிகள் இயக்க அரசியல் பொறுப்பாளர் திரு. கோபி மேலும் பேசுகையில்:- சில கிராம சேவையாளர்களின் பொறுப்பற்ற செயல்களால் மக்கள் சிரத்தையும், வெறுப்பும் அடைகின்றனர். அன்றாட அத்தியாவசிய அலுவல்களும் கால தாமதமடைகிறது. இந்த நிலை மாறி மக்களின் சுபீட்ச வாழ்வுக்கு கிராம சேவையாளர்கள் பாடுபடவேண்டும். வன்செயல்களால் இறந்த

(8ம் பக்கம் பார்க்க)

நேற்று 85 இளைஞர்கள் விடுதலை

(வடமராட்சி)

இந்திய அமைதிப்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 85 இளைஞர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டார்கள்.

உடுப்பிட்டி முகாமில் வைத்து இவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். (51-61)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல்

தவறிவிட்டது

எனது சாம்பல் நிறமுடைய Traveling Bag உடுப்புகளுடன் 17-2-90 இரவு கொழும்பிலிருந்து 8 மணிக்கு புறப்பட்ட K. S. B. பஸ்ஸில் காணுமல் போய்விட்டது. இதனை மாறி எடுத்தவர்கள் தயவு செய்து பின் வரும் விலாசத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: ''சமுத்ரதாரா'', சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (சி-3400)

வைத்தியசாலை ஊழியர் கடமையின் முக்கியத்தை உணர்ந்து சேவையாற்றவேண்டும்- தீபன்

(பருத்தித்துறை)

''வைத்தியசாலைகளின் நிர்வாகம் சிறப்பாகச் செயற்படும்போதுதான் மக்கள் சிறந்த சேவைகளைப் பெறமுடியும். வைத்திய சேவையில் ஈடுபடும் ஊழியர்கள் தமது கடமையின் முக்கியத்துவத்தினை உணர்ந்து செயல்படவேண்டும். பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் பல்வேறு வகையான குறைபாடுகள், சீர்கேடுகள் நிலவுவது மிகக் கவலைக்குரியதாகும்.''

மேற்கண்டவாறு பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலை அபிவிருத்திச்சபைக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. தீபன் குறிப்பிட்டார்.

கூட்டம் டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தொடர்ந்து உரையாற்றிய திரு. தீபன் குறிப்பிட்டதாவது:

வைத்தியசாலை சீர்கேட்டால் நோயாளிகள் பெரிதும் பாதிப்படைந்து வருகிறார்கள். ஊழியர்களின் கவலையீனத்தால் பலர் உயிரிழக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் பலவகை நிர்வாகச் சீர்கேடுகள் நிலவுவதாக பல புகார்கள் கிடைத்துள்ளன.. சுகாதாரச் சீர்கேடு இங்கு உச்சக்கட்டத்தில் உள்ளது. சில ஊழியர்கள் ஏனோ தானோ என பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கிறார்கள்

இந்தச் சீர்கேட்டை நிவர்த்திக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். நிர்வாகம் ஒழுங்காக செயற்பட ஒத்துழைப்பு வழங்கத் தவறி நோயாளர் பாதிப்பு ஏற்படக் கூடிய வகையில் நடந்து கொள்ளும் ஊழியர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் திரு. தீபன் வைத்தியசாலை நிலைமைகளை ஆராயும் பொருட்டு சகல பகுதிகளை சுற்றிப் பார்வையிட்டார். (52)

தனியார் கல்லூரி காலை வகுப்பிலை மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியரும் சோர்வடைகிறார்கள் - யாழ். மத்தியகல்லூரி அதிபர்

(யாழ்ப்பாணம்)

''தனியார் கல்வி நிலையங்களுக்கு காலையில் செல்லும் மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களும் நேரத்திற்குப் பாடசாலை வருவதில்லை. வந்தாலும் சோர்வடைந்து காணப்படுகிறார்கள்.''

யாழ். மத்திய கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் கல்லூரி அதிபர் திரு. வே. பாலசுந்தரம் தனது கல்லூரி அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும்கூறியதாவது: நமது நாட்டில் தனியார் கல்வி இன்றியமையாததாகி விட்டது. பெற்றோர் பிள்ளைகளுக்காகப் பெருந்தொகையான பணத்தைச் செலவிடுகிறார்கள். பிள்ளைகள் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று கற்கிறார்கள். இதன் விளைவு சுயசிந்தனை, சுய ஆற்றல் இல்லாத ஒரு கிளிப்பிள்ளைச் சமுதாயம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

பாடசாலைகளைப் பொறுத்த மட்டில் காலை நேரங்களில் தனியார் கல்வி நிறுவனங்களில் வகுப்புக்கள் நடைபெறுவதால் மாணவர்கள் பாடசாலைக்கு நேரத்திற்கு வருவதில்லை. வந்தாலும் சோர்வடைந்தே காணப்படுகிறார்கள். தனியார் கல்வி நிறுவனங்களிலும் ஆசிரியர்கள் தான் கற்பிக்கின்றார்கள். அவர்களும் அப்படியே காலையில் பாடசாலைக்கு நேரத்திற்கு வருவதில்லை. வந்தாலும் சோர்வடைந்து நல்ல முறையில் கற்பிக்கமாட்டார்கள் இது நாளாந்தம் பாடசாலைகளில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

எனவே சமுதாய நலனில் அக்கறையுடையோரும், மேல திகாரிகளும் காலையில் தனியார் கல்வி நிறுவனங்களில் வகுப்புகள் நடாத்துவதை சமுதாய நலன் கருதி தடுக்க வேண்டும் என்றார். பரிசில்களை பதில் கல்விப் பணிப்பாளர் வழங்கினார். (12)

மதிய உணவு சில பாடசாலைகளில் வழங்கப்படுவதில்லை

(பருத்தித்துறை)

வடமராட்சிப்பகுதியில் சில பாடசாலைகளில் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுவதில்லை எனப் புகார் செய்யப்பட்டுள்ளது. சில பாடசாலைகளில் தரமற்ற உணவுகள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (52)

குடும்பஸ்தர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தகராறு காரணமாக பருத்தித்துறை நாகர் கோவிலைச் சேர்ந்த ஒருவர் நேற்று கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

செல்லையா குஞ்சுத்தம்பி (வயது 48) என்பவரே தற்கொலை செய்தவராவர்.

சடலம் மரணவிசாரணையின் பின் மகனிடம் ஒப்படைக்கப் பட்டது. (56)

இளைஞர் கைது வரதர் கண்டனம்

(திருமலை)

இலங்கை அரசு கொழும்பில் தமிழ் இளைஞர்களைக் கைது செய்து சிறையில் அடைத்து வருகிறது என்றும் இது கண்டிக்கத்தக்கது என்றும் வடகிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் தெரிவித்துள்ளார்,

இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

வம்சாவளியினர் நிலைமை குறித்து பேச்சு

(பதுடில்லி)

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரின் நிலைமை குறித்து அமைச்சர் திரு. தொண்டமான் இந்தியவெளிவிவகார அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ராலுடன் பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.

அண்மையில் திரு. தொண்டமான் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோதே இப்பேச்சுக்கள் இடம்பெற்றன. இந்தியவம்சாவளியினர் இலங்கயில்பெரும் பாதிப்பிற்குள்ளாகி வருவதாகவும் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் பேச்சுக்களின் போது தெரிவிக்கப்பட்டது.

மேலும் வடக்கு-கிழக்கு நிலை தொடர்பாகவும் இரு அமைச்சர்களும் பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர். (சி)

19-02-1990 திங்கட்கிழமை பகல்
யாழ். மாவட்டம் முழுவதிலும்

மின்தடை

வாதரவத்தையில் 132 KW மார்க்க ஒருபக்கக் கம்பிகள் அறுந்த (Tower No. 183) திருத்த வேலைகளுக்காக மின்சாரம் நிறுத்தப்படுகிறது.

கொழும்பிலிருந்து சாமான்கள் (Materials) வந்து விட்டன.

யாழ்ப்பாணத்து ஆட்களே வேலை செய்வார்கள்.

காலை 8-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை நிறுத்தப்படும்.

மின் அத்தியட்சகர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்ப்பாணம்.

(சி-555)

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம் கிளிநொச்சி

மேற்படி எமது சங்கத்தில் பின்வரும் பதவிக்கு பின்வரும் தகைமையுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிப்போர் ''பொதுமுகாமையாளர், கரைச்சி தெற்கு, ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி'' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 08-03-1990-ந் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும். தபால் உறையின் இடதுபக்க மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

தமிழ், ஆங்கில தட்டெழுத்தாளர் பதவி

1. சம்பள அளவுத் திட்டம் — 305/13
   மாதாந்தம் 730—20X10 — 25X5 — 1055ம்
   அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.
2. வேண்டிய தகைமைகள் —
   க. பொ. த சாதாரண தரத்தில் (தமிழ் தட்டச்சு உட்பட) ஆறு (06) பாடங்கள் சித்தியுடன் நிமிடத்திற்கு 20 சொற்கள் தமிழிலும், நிமிடத்திற்கு 30 சொற்கள் ஆங்கிலத்திலும் வேகம் திருத்தல் வேண்டும்.
3. வயது 25 — 40 வரையும்

குறிப்பு:

1. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
2. சமீபத்தில் பெற்ற நற்சான்றிதழ்களுடன் தகைமைச்சான்றிதழ்களினதும் போட்டோப் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்.

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி. (சி-553)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கூறுவிலை கோரல்

யாழ். மாநகரசபை மின்தூண்கள் தயாரிக்கும் இடமான பாஷையூரில் இருந்து யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட வேலைத்தலங்களுக்கு 25', 28', 30' நீளமுள்ள மின்சாரத் தூண்களைச் சேதம் எதுவுமின்றி வண்டியில் ஏற்றிப் பறிப்பதற்கு 1990-ம் ஆண்டிற்கான கூறுவிலைகள் எதிர்வரும் 02-03-1990-ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கூறுவிலைகள், கம்பம் ஒன்று ஏற்றிப் பறிப்பதற்கு எவ்வளவு என்பதைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''மின்தூண் ஏற்றிப் பறிப்பதற்கான கூறுவிலை'' என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

வி. பி. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-552)

யாழ்ப்பாண பஸ்நிலையத்திற்கு முன்பாக பத்து ஆண்டுகளாக பெயர்பெற்றவர்கள் டில்கா வாச் வேக்ஸ்

சகலவிதமான மணிக்கூடுவகைகளையும் உத்தரவாதத்துடன் கைதேர்ந்த தொழிலாளர்களால் நியாயமான கட்டணத்தில் திருத்திக்கொடுக்கப்படும். சிக்கோ. சிட்டிசன் எலெக்ரேனிக் கடிகாரங்களை பழுதுபார்ப்பதில் வல்லவர்கள்

டில்கா வாச் வேக்ஸ்
404 1/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

DILKA WATCH WORKS, JAFFNA.

(ஏ 556)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

87-ம் ஆண்டின் பின்

நிக்கரகுவா மனித உரிமைகளை மதிக்கிறது

மன்னிப்புச் சபை மகிழ்ச்சி

பிறநாடுகளும் பின்பற்றக் கோரிக்கை

(லண்டன்)

நிக்கரகுவாவில் மனித உரிமை மீறல் படிப்படியாகக் குறைந்துவருவதாகவும் இந்த நடவடிக்கையில் அரசு மிகுந்த அக்கறை காட்டி வருவது எதிர்காலத்தில் அங்கு மனித-உரிமை பேணப்பட பெரிதும் உதவுமென 'சர்வதேச மன்னிப்புச்சபை' மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக 'சர்வதேச மன்னிப்புச்சபை' அறிக்கை ஒன்றினையும் அண்மையில் வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கை மேலும் குறிப்பிடுகையில்;

1987ம் ஆண்டு ஆகஸ்ட்டில் நிக்கரகுவா அரசு 'மத்திய அமெரிக்க சமாதான உடன்படிக்கை' ஒன்றில் கைச்சாத்திட்டது. இதையடுத்து வந்த காலப்பகுதியில் அந்நாட்டில் மனித உரிமை மீறல் படிப்படியாக குறைந்துவருகிறது. எனினும் கிராமப்புறப்பகுதியில் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்கள் நடப்பதாகவும் புகார் கிடைத்துள்ளது.

எனினும் பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் 'மனிதஉரிமை மீறல்' நிக்கரகுவா படிப்படியாகக் குறைத்து வருவது 'மன்னிப்பு சபை' யின் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியாகவே கருதவேண்டும். இதை ஏனைய நாடுகளும் பின்பற்ற முன்வரவேண்டும்.

மேலும் இவ்வாறான சிற்சில சட்டவிரோத செயல்களை பெருமளவுக்குத் தடுக்கவும் அரசு பாடுபடுமென அதிபர் திரு. டானியல் ஒட்டேகா தெரிவித்துள்ளாரென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

கிழக்கு பெய்ரூட்டில் கடும் சண்டை;

3 லட்சம் மக்கள் பாதிப்பு

நூற்றுக்கு மேற்பட்டோர் பலி

(பெய்ரூட்)

கிழக்கு பெய்ரூட்டில் போட்டிக் குழுக்களிடையே கடும் மோதல் இடம்பெற்று வருவதால் சுமார் மூன்று லட்சம் மக்கள் பலத்த பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். கடந்த நான்கு நாட்களாக இவர்கள் உணவு, மின்சாரவசதி எதுவுமின்றி வெளியேற முடியாத நிலையிலுள்ளனர்.

கிறிஸ்தவ, முஸ்லிம் குழுக்களிடையே இடம்பெறும் இச் சண்டையில் ஏவுகணை, பீரங்கித் தாக்குதல் கடுமையாக இடம்பெறுவதால் பெருமளவு கட்டிடங்கள், வீடுகள் முற்றாக தகர்க்கப்பட்டுள்ளன. நகரம் எங்கும் தொடர்ந்து புகை மண்டலமாகவே காட்சிதருகிறது.

இந்தச் சண்டையில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. யுத்தத்தை நிறுத்துமாறு ஐ. நா. சபை தொடர்ந்து வற்புறுத்திவருகின்ற போதும் இக்குழுக்கள் ஐ. நா. வின் அமைதி முயற்சிகளை அலட்சியம் செய்து தொடர்ந்துயுத்தத்தில் ஈடுபட்டுவருகின்றன.

கடந்த ஒருமாதத்தில் மாத்திரம் இவ்வாறான யுத்தத்தில் சுமார் 600 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிகளில் சேர்க்க முடியாத நிலையும் அங்கு ஏற்பட்டுள்ளது. (சி)

யாழ். பல்கலைக்கழக

அபிவிருத்திப் பணிக்கு 6 கோடி ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இவ்வாண்டுக்கான அபிவிருத்திப் பணிகளுக்கு பல்கலைக்கழக மானியக்குழு ஆறுகோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்நிதி கட்டம் கட்டமாக வழங்கப்படும். முதற் கட்டமாக வழங்கப்பட்ட நிதியிலிருந்து ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபா கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுவரும் விவசாய பீடத்துக்கு வழங்கப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் கட்டிட நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருவதாக பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜா தெரிவித்துள்ளார். (12)

தாயாருடன் செல்ல மறுத்து இளம்பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

தாயாருடன் செல்லமறுத்த இளம்பெண் ஒருவர் நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

வவுனியா சின்னவலயன் கட்டு பகுதியை சேர்ந்த மஞ்சுளா நவரட்ணம் (வயது-16) என்ற இளம்பெண்ணே தற்கொலை செய்தவராவர்.

இப்பெண் கடந்த10 மாதங்களாக பெற்றோரைவிட்டு முகமாலையில் பெரியதந்தையாரின் வீட்டில் வசித்துவந்தாரென்றும், சம்பவதினம் அவருடைய தாயார் அவரை வவுனியாவிலுள்ள தமது வீட்டிற்கு வரும்படி அழைத்ததாகவும், இதனை விரும்பாத அப்பெண் தற்கொலை செய்ததாகவும் விசாரணையின்போது தெரியவந்தது விசாரணை முடிவில் தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது.

சடலம் விசாரணையின்பின் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (56)

வல்லைப் பிரஜைகள்குழு கலைக்கப்படும்

(வடமராட்சி)

கடந்தகால நெருக்கடியான காலகட்டங்களில் மக்களுக்கும் படையினருக்கும் இடையில் தொடர்பாலமாக இருந்து மக்கள் பிரச்னை தொடர்பாக சேவையாற்றியவல்லைப் பிரஜைகள்குழு இம்மாதத்துடன் கலைக்கப்படுகின்றது.

மேற்படி தகவலை நேற்று முன்தினம் வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கலைகலாசார விழாவின்போது வல்லைப் பிரஜைகள் குழுத் தலைவர் தமது தலைமையுரையின் போது தெரிவித்தார். (51)

"தன்மானத்துடன் தமிழினம் வாழ்வதற்கு போராட்டம் தவிர்க்கமுடியாதது"

வல்வை பிரஜைகள் குழு தலைவர் உரை

(வடமராட்சி)

தன்மானத்தோடு தமிழினம் வாழ்வதற்கு போராட்டம் தவிர்க்கமுடியாத ஒன்றாகும் நாம் சுதந்திரமாக தன்மானம் உள்ளவர்களாக வாழவேண்டுமெனில் எம்மைத்தேடிவரும் எதிர்ப்பான போராட்டங்களை தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் மக்களாகிய நாமும் இணைந்து போராடவேண்டும்''

வல்வைப் பிரசைகள் குழுத் தலைவர் திரு. எஸ். செல்வேந்திரா. வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலை கலாசார விழாவிற்குத் தலைமைதாங்கி உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும்கூறியதாவது; புலிகள் ஆயுதப் போராட்டத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை மக்களின் உரிமைகளையும் அவர்களின் அபிலாசைகளையும் பெற்றுத்தருவதற்காக விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி என்னும் அரசியல் கட்சியையும் ஆரம்பித்து அரசியல் போராட்டத்தையும் நடத்தி பெரும் வெற்றிகளையும் பெற்றுவருகின்றார்கள். விரைவில் முழு வெற்றியையும் பெற்று ஒரு நிரந்தரமான தீர்வினையும் மக்களுக்குப் பெற்றுத் தருவார்கள் அதைக கருத்தில் கொண்டு மக்களுடன் பிரஜைகள் குழுவகிய நாமும் என்றும் எதற்கும் தயாராக இருக்கவேண்டும்.

மேற்படி இக்கலை, கலாசார விழாவில், வடமராட்சி மக்கள் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் தீபன், வல்வைப் பிரசைகள் குழுச் செயலாளர் திரு. நா. அனந்தராஜ், உபஉறுப்பினர்கள் திரு. வ. இ. நடனசிகாமணி, திரு. ஏ. தில்லையம்பலம், உடுப்பிட்டிப்பிரசைகள் குழுத் தலைவர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினர்.

கலை, கலாசார நிகழ்ச்சிகளில் வல்வை, பொலிகண்டி, கரவெட்டி போன்ற இடங்களிலிருந்து நடனம், நாடகம் பாட்டுப் பட்டிமன்றம் போன்றவை நடைபெற்றன.

மேற்படி விழாவின் இறுதியில் வல்வைப் பிரசைகள் குழுப் பொருளாளர் திரு. பொ. யோகேந்திரன் நன்றி கூறினர். (51)

சர்வதேச எழுத்தறிவு ஆண்டு

(லண்டன்)

ஐக்கிய நாடுகள் சபை 1990-ம் ஆண்டை சர்வதேச எழுத்தறிவு ஆண்டாக பிரகடனம் செய்துள்ளது.

இவ்வாண்டில் எழுத்தறிவு குறைந்து வாழும் மக்களுக்கு எழுத்தறிவை ஊட்டும் பொருட்டு சர்வதேச ரீதியாக திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளன.

பறக்கும் 'தாஜ்மஹால்' 'புஷ்'சிற்கு புதிய விமானம்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் தனிப் பாவனைக்கென புதிய விமானம் ஒன்றை அமெரிக்க அரசாங்கம் உருவாக்கியுள்ளது. இவ் விமானத்தை போயிங் நிறுவனம் அறுபத்தைந்து கோடி டாலர் செலவில் பத்தாண்டுகளில் வடிமமைந்துள்ளது. இந்த விமானத்தை ஆகாயத்தில் ஒரு அரண்மனை என்று சொல்லுமளவுக்கு சகல வசதிகளும் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்விமானத்துக்கு பறக்கும் ''தாஜ்மகால்'' எனப் பெயரிட்டுள்ளனர். இவ்விமானத்தினை நிறுத்துவதற்கு ஐந்து கோடி டாலர் செலவில் புதிய விமான நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விமானம் ஆகாயத்தில் பறக்க ஒருமணிநேரத்துக்கு 6000டாலர்செலவாகும்.

விமானத்தில் குளியலறை, மின்சாரத்தால் இயங்கும் ஜன்னல், தொண்ணூற்றி மூன்று பேருக்குத் தேவையான ஒரு வாரகால உணவு, ஏழு மாலை கூடங்கள், உலகின் பல பாகங்களுக்கான 85 தொலைபேசி இணைப்புகள், ஆவணங்களைப் பாதுகாக்கும் பெட்டகம், மாநாட்டு மண்டபங்கள், கம்பியூட்டர், நகல் எடுக்கும் சாதனம், மருத்துவமனை, இரண்டு பத்திரிகையாளருக்கான தனி அறைகள், பத்து தொலைக்காட்சிகள் உட்பட பல வேறுவசதிகளும் உள்ளன. (12)

"பொதுமக்கள் நலன்கருதி உத்தியோகத்தர்கள் தொண்டாற்றவேண்டும்"

(வட்டுக்கோட்டை)

''கடமை உணர்வு நிரம்பியவரும் சேவை மனப்பான்மை உள்ளவரும் சிறந்த நிர்வாகஸ்தருமான திரு. பாலசிங்கத்திற்கு ஓய்வு பெறும் நேரத்திலாவது பதவி உயர்வு கிடைத்தமையையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். நீண்டகாலமாக நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இவர் தமது நேர்மையான செயற்பாட்டினால் மேலதிகாரிகளின் பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்றிருக்கிறார். எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஓய்வுபெற இருக்கும் இவருக்குப் பதவி உயர்வு கிடைத்தது பாராட்டுக்குரியது.

சங்கானைஉதவிஅரசாங்கஅதிபர் பணிமனையில்நிர்வாகஉத்தியோகத்தராகஇருந்துவேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு உதவி அரசாங்க அதிபராகப் பதவிஉயர்வுபெற்றுச் செல்வதைப் பாராட்டும் முகமாக நடாத்தப்பெற்ற சேவைநலம் பாராட்டுவிழாவுக்குத் தலைமைதாங்கி தலைமையுரை நிகழ்த்திய சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இப்பாராட்டு வைபவம் சங்கானை உதவி அரசாங்கஅதிபர் பணிமனையில் நடைபெற்றது.

திரு. து. வைத்திலிங்கம் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது: பாராட்டத்தக்க பண்பாடுகள் நிறைந்த இவர் பிரக்ஞையான காலங்களிலெல்லாம் சிறந்த சேவையாற்றியிருக்கின்றார்.

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

"எக்காரியத்தையும் நன்கு ஆராய்ந்து செய்தலையும், இடையூறுத அறிவு விளக்கத்தையும் உடையனுதல் வேண்டும். ஆராயாது செய்தலையும், சோம்பலையும் காலம் தாழ்த்தலையும் ஒரு பொழுதும் மேற்கொள்ளலாகாது"

— சுக்கிர நீதி

நமது நோக்கு

திருமலையிலா இந்த நிலை?

பண்பாட்டுப் பெருமை வாய்ந்த தமிழ்பேசும்இனம் பல வகைகளாலும் இன்னலுற்று, வேதனைப்பட்டு வந்துள்ளது. உரிமைகள் இல்லாத மக்களாக, சொந்தக் கலை, கலாசாரத்தையே பேணிக்காக்க முடியாதவர்களாக இருந்து வந்துள்ளனர்.

இந்த நிலை வேகமாக மாறிவருகின்றது; மாறி வரவேண்டும். இதுவே சகலரது பேரவாவாகும்.

சென்ற சிலஆண்டுகளாக நாட்டின் அசாதாரணநிலை கலை, கலாசார வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லை.

இதேபோல, நமது பாரம்பரியப் பிரதேசங்களில் உள்ளதொல்பொருள்களைப் பேணிக்காப்பதிலும் கவனம் குறைந்து விட்டதோ என்ற சந்தேகமும்ஏற்பட்டுள்ளது. வரலாற்றையும், பண்பாட்டையும் பிரதிபலிக்கும் தொல்பொருள்களை அடுத்து வரும் சந்ததிகளுக்கு வழங்கத் தவறுகிறோமா?

காரணம் என்ன? திருமலையிலிருந்து ஓர் அதிர்ச்சி தரும் செய்தி வந்துள்ளது. அது திருமலையில் உள்ள தொல்பொருள் காட்சிச்சாலை பற்றியது.

இந்தக் காட்சிச்சாலை பத்து ஆண்டுகளுக்கு முன்புதான் ஆரம்பிக்கப்பட்டது. அப்பகுதியில் உள்ள பல அரும்பொருள்கள் காட்சிச்சாலையில் சேமித்து வைக்கப்பட்டன.

கோணேசர் ஆலயப்பகுதி குளக்கோட்டு மன்னன் ஆண்டபகுதி, தம்பலகாமப் பகுதி போன்ற பல பகுதிகளிலே அகழ்வாராய்ச்சி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு மேலும் அரிய பல பொருள்கள் வைக்கப் படவேண்டிய இடமாக அது விளங்கியது.

தமிழர் தம் நீண்டகால வரலாற்றுக்குப் பல சான்றுகளை உலகத்தவர்களுக்கு எடுத்துக்காட்டவேண்டிய அரும்பெரும் காட்சிசாலையாக வளரவேண்டியது.

ஆனால், இன்று அந்தக் காட்சிசாலைக்கு நடந்ததென்ன? எந்த நிலையில் அது உள்ளது?

கவனிப்பாரற்ற நிலையில் கைவிடப்பட்டுவிட்டதோ என்று சந்தேகப்படவேண்டிய நிலையில் உள்ளது. குப்பை கூளங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

அங்கு அலுவலர்கள் எவரும் இல்லை; காவலாளி கூட இல்லை. பிரதானமான வாசற்கதவு பூட்டப்பட்ட நிலையில் உள்ளது. ஆனால் உள்ளே போவதற்கோ பல பாதைகள் காணப்படுகின்றன.

இதன் பெயர்ப்பலகை கூட காட்சிப் பொருள்களோடு சங்கமித்துக் காட்சிப்பொருளாக மாறிவிட்டது.

இந்த நிலையைத் தொடர விடலாமா? அரிய பொருட்களை அழிய விடலாமா?

திருமலைப் பகுதி, தமிழ் மக்களுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அதன் வரலாற்றுப் பின்னணியையோ சான்றுகளாக விளங்கும் தொல்பொருள்களையோ எக்காரணம் கொண்டும் அழிய விடக்கூடாது.

அரும்பொருட்களைக் காட்சிக்கு வைப்பதிற் சிரமம் இருந்தாலும், அவற்றை பாதுகாத்து வைப்பதிலாயினும் உடனடிக் கவனம் செலுத்தப்படவேண்டும்.

தமிழ்மக்களது கலாச்சாரப்பெருமையை வெறும் வாயளவில் மாத்திரம் பேசிப்பயனில்லை. நிரந்தரமான கலாசாரச் சின்னங்களைப் பேணிக்காப்பதிலும் கூடிய கவனம் செலுத்தப்படவேண்டுமென்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

கல்வி ஊழியர்களுக்கு சிறுகதைப் போட்டி நடாத்த ஏற்பாடு

(ஆனைக்கோட்டை)

கல்வி ஊழியர்களின் மட்டுப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்கம் தமிழ் மொழியில் சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்த முன் வந்துள்ளது.

இதன் அங்கத்தவர்களுக் கிடையிலான இப்போட்டி மாவட்டத்திலும், தேசியமட்டத்திலும் நடத்தப்படவிருக்கின்றன. வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், பணப் பரிசுகளும் வழங்கப் படவிருக்கின்றன.

மாவட்ட மட்டத்தில் வெற்றி பெறுபவர்களுக்கு முதலாம் பரிசாக ரூ.500 ம் 2ம் பரிசாக ரூ. 300 ம், 3ம் பரிசாக ரூ. 200ம் வழங்கப்படவிருக்கின்றன. வெற்றி பெறும் பத்து சிறு கதைகளை இலங்கை நூலக சபையும், இலங்கை அச்சகக் கூட்டுத்தாபனத்தின் அனுசரணையுடன் அச்சிட்டு விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய மட்டத்தில் முதலாமிடத்திலிருந்து பத்தாம் இடங்கள் வரைக்கும் வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்படுமென வும் முறையே ரூ 3000, ரூ. 2000, ரூ.1000 முதலாம் இரண்டாம் மூன்றும் பரிசுகளாக வழங்கப்படவிருப்பதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது. சகல சிறுகதைகளும் அடுத்த மாதம் 31ம் திகதிக்கு முன் சங்க செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (139)

தற்கொலை

(யாழ்ப்பாணம்)

வேலணைமேற்கைச் சேர்ந்த ம. கனகரத்தினம் என்பவர் கிருமிநாசி அருந்தி தற்கொலை செய்துகொண்டார். (எஸ்)

சுற்றுப்புறச் சூழலில் கிருமிநாசினிகள்

கிருமிநாசினுக் கலவை காரசாரமாக இருக்கின்றதா என்பதைக் கைவிரலைக் கலவையில் விட்டு நாவைத்து, நாக்கினால் சுவைத்தே அறிந்து கொள்கிறார் வட சுமாத்திராவைச் சேர்ந்த விவசாயி பக்சுக்ரி. இவருக்கு 70 வயதாகிறது. கோவா, உருளைக் கிழங்கு போன்றவற்றைப் பயிரிடும் விவசாயிகள் வாழும் மாவட்டத்தில் அவர்கள் கிருமிநாசினிகளுக்கு நன்கு பரிட்சயமானவர்களாக இருந்தும், முறைகேடாக அவற்றினை உபயோகிக்கும் பல விவசாயிகளுள் பக்சுக்ரியும் ஒருவர்.

பக்சுக்ரி ரசாயனப்பொருட்களைத் தெளிக்கும்போது பாதுகாப்பு நெறிமுறைகளை அனுசரிப்பதேயில்லை. சிபார்சு செய்யப்பட்ட தேவைகளையோ, வேளைகளையோ பொருட்படுத்தாமலேயே அவர் கிருமிநாசினிகளைத் தெளிக்கின்றார். உதாரணமாக, மழை பெய்த கையிடன் பூச்சிகள் பல்கிப் பெருகுவதை தடுத்தல் அவசியம் என்ற நம்பிக்கையில், அவர் மிகவும் மும்முரமாகவே கிருமிநாசினிகளைத் தெளிப்பதுடன் வெற்றுப் பாத்திரங்களையும், போத்தல்களையும் கண்டபடி விட்டு விடுகிறார்.

கண்டபடி கிருமிநாசினிகளை உபயோகிக்காதவிடத்து தமது அறுவடை குறைந்து விடும் எனப்பயந்துகொண்டே பயிர் செய்யும் உள்ளூர் விவசாயிகளின் விரும்பத்தகாத பழக்கவழக்கங்களைப் பற்றி கவலைகொண்டு செயற்படுகிறது. கிருமிநாசிகளின் முறைசாரா உபயோகத்திற்கெதிர்ராக இந்தோனேஷியாவின் தொண்டர் இயக்கங்களின் கட்டியம். வட சுமாத்திராவின் கிராம விவசாயிகள் தமது உள்ளூர்க் கடைகளிலேயே சிகரெட் வாங்குவது போன்று மிகச் சுலபமாகக் கிருமிநாசினிகளை வாங்க முடிகிறதென மேற்கூறிய தொண்டர் கட்டியம் அறியத் தருகின்றது.

மனித இனத்திற்கோ அல்லது சுற்றுப்புறச் சூழலுக்கோ மிகவும் பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தவல்ல கிருமிநாசினிகள், கலை கொல்லிகள் எனக் கருதப்படும் 12 ரசாயனப் பொருட்களுமே வளர்முகநாடுகளில் கோப்பி, தேயிலை, றப்பர், வாழை, பருத்தி போன்ற ஏக்றுமதிப் பயிர்ச் செய்கைகளுக்கு உபயோகப்படுத்தப் படுகின்றன. இவற்றுட் பரக்குவட், பரத்தியோன், லின்டேன், குளோடேன், அல்றின். டிஅல்றின், என்றின், 2, 4, 5, ரி ஆகிய எட்டும் இன்னும் உபயோகத்திற்கு விடப்பட்டிருக்கையில், மற்றைய நான்கிற்கும் இந்தோனேஷியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளமையால், நாட்டுக்குள் கொண்டு வருவதும் சட்டவிரோதமாகிறது.

இந்தோனேஷியாவில் எங்கெல்லாம் இவற்றின் உபயோகத்தால் வரும் பயங்கர விளைவுகளுக்கு பாதுகாப்பு உறுதிப்படுத்த முடியவில்லையோ, அங்கெல்லாம் இப்பேற்பட்ட தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பொருட்களின் உபயோகம் நிறுத்தப்பட வேண்டுமென தொண்டர் கட்டியம் வேண்டுகிறது.

சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஈடுகொடுத்து' உணவுற்பத்தி, குறிப்பாக நெல்லுற்பத்தி. அதிகரித்திருப்பதுகிருமிநாசினிகளின் உபயோகத்தினாலேயே என்கிறார் ஜகார்த்தாவிலுள்ள ஐக்கிய அமெரிக்க மொன்சாண்டோ நிறுவனத்தின் தொழில் நுட்ப முகாமையாளரான அன்வர். உலகளாவிய ரீதியில், கிருமிநாசினி உற்பத்தியில் முன்னணி வகிக்கும் முதல் மூன்று நிறுவனங்களும் ஐக்கிய அமெரிக்கா, மேற்கு ஜேர்மனி, சுவிற்சலாந்து நாடுகளின் நிறுவனங்களே.

பாகிஸ்தானில் பயிர் செய்யப்படும் இடப்பரப்பில் 43% ற்கு கிருமிநாசினி உபயோகிக்கப்படுவதாக மதிப்பிடும் ஜெர்மனியின் பெயர் கம்பனிக்கான பாகிஸ்தான் பப்கோ நிறுவன இயக்குநர் அப்துல் அஸீஸ், தமது நிறுவன விற்பனையில் 60% அதிகரிப்பை எதிர்பார்க்கினறார். மேலும் விவசாய ரசாயனப் பொருட்களை வாங்குவதற்காக விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் கடன் வசதிகளை மும்மடங்கு ஆக்கும் படி பாகிஸ்தானிய அரசை பப்கோ நிறுவனம் வேண்டி நிற்கின்றது.

கண்டபடி உபயோகிப்பதனால் பாதிப்புகள் ஏற்படலாம் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளும் அரீப், நன்மை பயப்பனவாக இருக்கும் வரை கிருமிநாசினிகளை தடைசெய்வதற்கு காரணமேயில்லையென்றும் அவற்றின் முறைசாரா உபயோகத்தை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் தொழில் நுட்ப முகாமையாளர் அன்வர் விவாதிக்கின்றார். பொதுவாக சிலறை உபயோகமட்டத்தில், வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் மேற்பார்வையுடன் கூடிய சிறந்த பயிற்சியளிப்பதன் மூலமும், பொதுசன அறிவூட்டல் மூலமும் தமது உற்பத்திப் பொருட்களின் முறையான, சரியான உபயோகம் உறுதி செய்யப்படலாமென கிருமிநாசினிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் நம்பவைக்கப் பார்க்கின்றன. இப்பேர்ப்பட்ட அறிவூட்டல்களுக்கு இரு இடைஞறுகள் உண்டு. முதலாவதாக, கிருமிவர்க்கங்களில் வளர்ந்துவரும் கிருமிநாசினிகளின் தாக்கத்தை எதிர்த்துத் தாக்குப் பிடிக்கும் வன்மைக்கேற்ற விதத்தில் உபயோகிக்கப்பட வேண்டிய புதுப்புது மாற்று ரசாயனப் பொருட்களை மிகத் துரிதமாக சந்தைப்படுத்தல். மலேரியா நுளம்பின் இத்தகைய நன்மைக்கேற்ப இந்தோனேஷியாவிலும், இலங்கையிலும் ஏலவே டி. டி. ரிக்குப் பதிலீடாக மலத்தியன், மலேரியா நுளம்புக் கொல்லியாக உபயோகப்படுத்தப்படுகின்றது.

அடுத்த காரணம், வர்த்தகப் பெயர்களில் பவனிவரும் கிருமிநாசினிகளை, உற்பத்தி செய்யப்படும் நாடுகளில் வேண்டியளவு பரிசோதிக்கப் படுவதேயில்லை. வாஷிங்டனிலுள்ளசுற்றுபுறசூழல்நியுணத்துவக் குழுவின் அபிப்பிராயத்தின்படி, ஐக்கிய அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட பயங்கர விளைவுகளைத் தரவல்ல பரக்குவட் பற்றிய பரிசோதனைத் தகவல்கள் எல்லாம் பொய்யான தகவல்களே. பல வருடகாலம் பரக்குவட், வளர்முக நாடுகளிலே உபயோகிக்கப்பட்ட பின்னரே சட்டத்திற்கு ஏற்ற விதத்தில் பரக்குவட், வேண்டிய பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படவில்லை என்ற உண்மை தெரியவந்தது. ஐக்கிய அமெரிக்க புலனுய்வுப் பணியகமும், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு நிறுவனமும் காலங்கடந்தாவது இந்த மோசடியைவெளிப்படுத்தியுள்ளன.

விவசாயரசாயனப் பொருட்களின் உபயோகம் பற்றி பொதுமக்களுக்கு வேண்டிய அறிவூட்டல்தான் பாதுகாப்பற்ற உபயோகங்களுக்கும், இப்பேற்பட்ட மோசடிகளுக்குமான விடையாகுமா? உலகச் சந்தையில் விலைப்படுவனவற்றில் 40% வளர்முக நாடுகளிலேயே விலைப்படுகின்றது. இந்த விகிதம் துரிதகதியில் கூடிக்கொண்டே போகும். 1980-ம் ஆண்டில் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கிருமிநாசினிகளை வளர்முக நாடுகளே இறக்குமதி செய்தன.

இந்தோனேஷிய குடும்பத் திட்டத்தைப்போன்று சகல பொதுசனத் தொடர்பு சாதனங்களினூடாகக் கிருமிநாசினிகளின் துர்ப்பிரயோகம் பற்றிய 'சமூக சந்தைப் படுத்தல்' அவசியமாகின்றது என்கிறார் அமெரிக்கக் கிருமிநாசினி தயாரிப்பு நிறுவனத்தின் முகாமையாளர் ஆனல். விவசாய இரசாயனப் பொருட்களில் கொள்ளை இலாபம் ஈட்டுவோரிடையேயும், கழுத்தறுப்புப் போட்டிகளில் ஈடுபட்டிருக்கும் உற்பத்தியாளர்களிடையேயும், குறைந்தவசதிகள் கொண்ட, சிறிய அளவினதான தொண்டர் நிறுவனங்களே சுற்றுப்புறச் சூழல் விடயங்களை இன்றுவரை கவனத்துக்கு எடுத்துக்கொண்டுள்ளன.

தொகுப்பு: 'ஜெயா'

யாழ். கூ. மொ. வி நிலையம் இடம் மாறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கூட்டுறவு மொத்த வியாபார நிறுவனம் விரைவில் யாழ்ப்பாண நகரிலுள்ள தனியார் கட்டிடமொன்றில் இயங்கவுள்ளது. இந்நிறுவனம் யாழ்ப்பாணம் ரயில் நிலைய களஞ்சியசாலையில் இதுகாலவரையும் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. (12)

பலதும் பத்தும்

அந்த நிகழ்ச்சி!

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சில மாணுக்கரின் கல்விக்குத் தொல்லைதான்!

ஆனால் சில நிகழ்ச்சிகள் மாணுக்கரின் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. 'புவியில் உயிரினங்கள்' (Life on Earth) என்ற தொடர் ரூபவாஹினியில் ஒவ்வொரு வியாழன் இரவும் 8-30 மணி முதல் நடைபெறுகின்றது. க.பொ.த. மாணுக்கர்கள் இதனைத் தவறவிடக்கூடாது.

தும்பி ஏன் லாவகமாகப் பறந்து திரிகிறது என்பதை பாடசாலை மாணுக்கரின் ஆங்கிலப் புத்தகத்தில் ''Finding out'' பகுதியில் விளக்கியுள்ளார்கள், சென்ற வாரத்தில், 'புவியில் உயிரினங்கள் நிகழ்ச்சியில் தும்பியின் பறக்கும் தன்மை பற்றியும் விரிவாக விளக்கினர்கள்'

இந்த நிகழ்ச்சியைத் தவறுது பார்க்கும்படி யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடம் விடுத்த அறிவிப்பு அறிவித்தற் பலகையிற் காணப்படுகின்றது.

எல்லா மாணுக்கரிடமும் தொலைக்காட்சி வசதியுண்டா? வசதியுள்ள பாடசாலைகள் இந்த நிகழ்ச்சியையும் இதுபோன்ற நிகழ்ச்சிகளையும் வீடியோ மூலம் பதிவுசெய்து, பாடசாலை நேரத்திற் காண்பிக்கலாம் அல்லவா?

வாணி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சனிகிரகம் லட்சாதிபதியை பிச்சைக்காரனுக்கினர்!

பிச்சைக்காரனை லட்சாதிபதியாக்கினர்!!

உலகம் சுழல்வதற்கும், உலகில் ஒளியும் காற்றும் பரவுவதற்கும் மனிதனின் ஆயுளுக்கும், உயிர், உடல் ஆகியவற்றுக்கும் அவற்றின் இயக்கத்திற்கும் நேரடித் தொடர்புள்ள கிரகம் சனிக் கிரகமாகும்.

ஒவ்வொருவரும் அவரவர் பூர்வஜென்மபயனுய் பிறக்கி றும். அந்த நியதிப்படி ஊழ் வினைப்பயனை அனுபவிக்க வேண்டியுள்ளது. நம்மை ஊழ்வினைப்பயனை அனுபவிக்க வைப்பதில் நவக்கிரகங்களில் தலையாய பங்குவகிப்பவன் சனிபகவான்.

நவக்கிரகங்களில் மிகவும் பயப்படக்கூடிய அதேசமயம் அதிகபக்திசெலுத்தக்கூடிய கிரகம் சனீஸ்வரன். மற்றகிரகங்களைவிட அதிகமாக மக்களால் பேசப்படும் கிரகமும் சனீஸ்வரன்தான்.

சனீஸ்வரனைக் கொடியவன்: அதிகம் தொல்லை கொடுப்பவன், கொடுமைப்படுத்துபவன் இரக்கமே இல்லாதவன், என்றெல்லாம்சொல்லப்படுகிறது. உண்மையில் சனீஸ்வரன் கொடுமையானவராகவோ தொல்லைகொடுப்பவராகவோ இல்லை. அவர் நீதிமான் அவர் மனிதர்களை புடம்போட்ட தங்கமாக்கக்கூடியவர். நமது பூர்வபுண்ணியபயனுய் நம்மை ஆரம்பத்தில் சோதிக்கும் நீதி தேவர். நேர்மையின் வடிவம். வறுமையிலும் நேர்மை. ஏழ்மையிலும் பக்தி, வாழ்வு தாழ்வு உற்றபோதிலும் மன நிலை சார்ந்திடாமல் அவரைச் சரணடைபவர்களுக்கு அவர் ஒரு கற்பகவிருட்சம். காலச் சக்கரத்தைப் பிளப்பதில் வல்லவர்.

சனிபகவான் இலட்சாதிபதியை பிச்சைக்காரனுக்குவார் பிச்சைக்காரனை இலட்சாதிபதியாக்குவார். அது அவரவர் பாவபுண்ணியத்திற்கமைவாகவே.

சங்கடம் தீர்க்கும் சனிபகவானே, மங்களம் பொங்க மனம்வைத்தருள்வாய், சச்சரவின்றி சாகாநெறியில், இச்சகம்வாழ இன்னருள் தா! தா!

என சனிபகவானிடம் இறைஞ்சினுல் அவர் சகலருக்கும் சர்வமங்களங்களையும் அருளிடுவார் என்பது திண்ணம்.

வரலாறு கூறும் உண்மைகள்

உலகிலுள்ள எல்லாமதத்தினரும் சனியைக்கண்டுஅஞ்சுவதாக உலகின் மிகப்பழமையான சமயநூல்களும் புராணநூல்களும் கூறுகின்றன. எல்லா மதங்களைச் சார்ந்த கடவுள்களையும் தேவர்களையும் கூட சனிபகவான் கஸ்டப்படுத்தியுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இயல்பிலேயே சனி தீமைகளையும் கொடுமைகளையும் செய்வதாகவும் ஏமாற்றத்தைத்தருபவராகவும் சனீஸ்வரனை மக்கள் நம்புகின்றனர். தவ தூலாகிய பைபிளில் சாத்தான் (Satan) என்னும் பிசாசைப்பற்றி செய்திகள் கூறுகின்றன. அது மிகவும் பயங்கர தீமைகளைச் செய்வதாகவும் இயேசுகிறிஸ்துவையே படாதபாடுபடுத்தியதாகவும் ஆதிமனித ஜோடிகளான ஆதாம் ஏவாளை மயக்கியதாகவும் பலசெய்திகள் காணப்படுகின்றன.

இஸ்லாமியர்களும் அச்சாத்தானேயே ''இஃபிலிஸ்'' என வழங்குகின்றனர். இஃபிலிஸ் சாத்தான் எனக்கூறப்படுவன சனியைத்தான் குறிப்பிடப்படுகின்றன.

கிரேக்கர்களும் சனியை ஒரு பயங்கர கிரகமாகவே கருதியுள்ளனர்.

நவக்கிரகங்களில் பெரியவன் சனி

நவக்கிரகங்கள் அனைத்துமே சூரியனைமையமாகக்கொண்டு இயங்குகின்றன. இவற்றுள் சூரியன், சனி, வியாழன் ஆகிய மூன்றும்தான் அளவாலும் சக்தியாலும் பெரியவை முக்கியமானவை சனி, பூமியை விட ஒன்பது மடங்கு பெரியது. பூமிக்கு அருகே சனி வரும்போது பூமிக்கும் சனிக்கும் இடையில் உள்ளதூரம் எழுபத்திநாலரைக்கோடி மைல்கள் பூமியை விட்டுவிலகிச்செல்லும்போது பூமிக்கும் சனிக்குமிடையிலான தூரம் நூற்றிரெண்டே முக்கால் கோடி மைல்களாகும்.

சனிதன்னைத்தானேஒருமுறை சுற்றிக்கொள்வதற்கு பத்தரை மணி நேரமும், சூரியனை ஒரு முறை சுற்றிவர இருபத்தொன்பதரை ஆண்டுகளும் ஆகின்றன. இராசி மண்டலத்திலுள்ள ஓர் இராசியைச் சனி கடப்பதற்கு இரண்டரை ஆண்டுகளும் பன்னிரு ராசிகளையும் ஒருமுறை சுற்றி வருவதற்கு முப்பது ஆண்டுகளும் ஆகின்றன.

சனிபகவான் திருக்கணித பஞ்சாங்கப்படி மார்ச் மாதம் இருபத்தோராம்திகதி நள்ளிரவு பன்னிரெண்டு மணி ஐந்து நிமிடத்துக்கு தனு ராசியில் இருந்து மகர ராசிக்குள் பிரவேசிக்கிறார்- இதனல் நிகழப்போகும் பலாபலன்களை தொடராக ''ஈழநாடு'' வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றது- (ஆ-ர்)

எனவேதான் எல்லோர் ஜாதகத்திலும் இராசிச்சக்கரத்தையும் ஒரு சுற்றுச்சுற்றி வருவதற்கு சனிக்கு முப்பது ஆண்டுகள் ஆகின்றன. அந்தக் காலங்களில் எத்தனை மாற்றங்கள், எத்தனை நிகழ்வுகள், சோதனைகள் எதிர்பாராத நன்மைகளும் கூடச்செய்து விடுகிறான். இதனல்தான் முப்பது ஆண்டுகள் வாழ்ந்தவனுமில்லை. முப்பது ஆண்டுகள் தாழ்ந்தவனுமில்லை என்பது நாட்டுப்பழமொழி.

பிறப்பும் வளர்ப்பும்

தேவரும் மனிதரும் நடுங்கும் கிரகமான சனீஸ்வரன் பிறப்பைப்பற்றி பல நூல்கள் இவ்வாறு கூறுகின்றன.

-ஐயா. சச்சிதானந்தம்-

சனி பகவானுடையதந்தை சூரியன், அவருக்கு சங்கை, பிரபை, நாட்டு இளவரசி என்று மூன்று மனைவிகள். முதல் மனைவி சங்கை வைவசுதமனுயமன், அசுவினி, தேவர்கள், யமி, யமுனைஎன்ற பிள்ளைகளையும் பெண்களையும் பெற்ற பிறகு சூரியனுடைய வெப்பம் தாங்க முடியாமல் தவித்தாள்.

அவள் தன் குறையைக் கணவனிடம் தெரிவிக்காமல் தன் நிழலையே தன்னைப் போன்ற உருவமுள்ள பெண்ணுக்கி அவளுக்கு சாயாதேவி என்று பெயரிட்டாள். அவன் தனக்குப்பதிலாக கணவனை இல்லத்தில் விட்டுவிட்டு தன் தாய் வீடு சென்றுள்.

முதல் மனைவி சாயதேவி போல் இருந்ததால் சூரியன் சந்தேகப்படவேயில்லை சாயாதேவியும் சங்கையின் குழந்தைகளைத் தன்குழந்தைகளைப் போல வளர்த்தாள். அவளுக்கு காலர்ணி, விஷ்பு, தபதி, சனி ஆகிய குழந்தைகள் பிறந்தன. அதன்பிறகு சாங்கையின் குழந்தைகளைக் கவனிக்க சாயாதேவியால் முடியவில்லை. இதனல் அவளின் பிள்ளையான யமன் அத்திரமடைந்தான். சாயாதேவியுடன் சச்சரவுசெய்தான்.

உண்மையை தந்தை சூரியனிடம் தெரிவித்தான். உண்மை தெரிந்த சூரியன் சாயாவை வெறுத்தான். இதைக்கண்டசனிக்கு கோபம் வந்தது. தந்தையை விரோதியாக நினைத்தான். அவனும் அவன் கூடப்பிறந்தவர்களும் பெற்றோரை விட்டுக் கானகம் சென்று தவமிருந்து ஈஸ்வரனுனுன்.

சனிபற்றிய உண்மைகள்

சனிபகவான் ஆணும் அல்லாத பெண்ணுமல்லாத அலிக்கிரகம். கருமை நிறத்துக்கு ஆதிபத்தியமுடையவன். சனிபகவானின் அதிதேவதை எமன். சனியின் உருவ வடிவமைப்பு வில் ஆகும்.

சனிபகவான் ஆயுளுக்கு காரகம் வகிக்கிறார். சனிபகவானின் தேவி நீலாதேவி. இவரது மரபு சூத்திர மரபாகும். சனியின் வாகனம் காகம் ஆகும். இவரது சமித்து வன்னி ஆகும். நவதானியத்தில் எள் அம்சம் பெறுகிறார்.

திக்குகளில் மேற்குத்திசை இவருடையது. உலோகங்களில் இரும்புக்கு அதிபதியாகிறார். மலர்களிலே கருங்குவளைக்கு வசியமாகிறார். நவரத்தினங்களில் நீலக்கற்களுக்கும் அதிபதியாகிறார்.

சனியின் ஆட்சி வீடு மகரம் கும்பமாகும். துலாம் ராசியில் உச்சம் பெறுகிறார். மேஷராசியிற் நீஸமடைகிறார். சனி தாம் நின்ற ஸ்தானத்திலிருந்து மூன்று ஏழு பத்து ஆகிய இடங்களைப் பார்வை செய்கிறார்.

சுவைகளில் சனி கசப்புக்கும் புளிப்புக்கும் ஆதிபத்தியம் ஆகிறார். சனி குரூர எண்ணமுடையர். சனி வாத நோய்க்குக காரணமாயிருக்கிறார் அந்நிய பொழிக்குக் காரகமாகிறார். சூலைக்கடியும் என் புருக்கி நோயும் வருவதற்கு அவரே காரணம்.

சனிபற்றிய பலாபலன்கள்

ஒவ்வொரு ஜாதகருக்கும் கண்டச்சனி, அர்த்தாஸ்டமச்சனி, அட்டமத்துச்சனி. 7½ நாட்டுச்சனி என நான்குவிதமாக சனியின் நன்மை தீமைகள் நடைபெறுகின்றன. முதலில் வரும் ஏழரைநாட்டுச் சனியை மங்கு சனியாகவும், இரண்டாம் முறை வருவதை பொங்குசனியாகவும், மூன்றும் முறை வரும் ஏழரைச்சனியை மரணச்சனியாகவும் சோதிட சாஸ்திரம் தெரிவிக்கின்றது.

சனிபகவான் ஜாதகருக்கு தீமைகளாக இருந்தாலோ, கோசாரப்படி 1,2,4,7,8,12 ஆகிய வீடுகளில் சஞ்சரித்தாலோ சனிக்கு பரிகாரம் செய்வது அவசியமாகும்.

ஏழரைச்சனி

சனீஸ்வரபகவான் ஒரு ராசியைவிட்டு கடக்கும் கால அளவு இரண்டரை ஆண்டுகள். சந்திரன் நின்ற வீட்டுக்கு 12, 12 ஆகிய மூன்று வீடுகளைக் கடக்க எடுத்துக் கொள்ளும் காலளவு ஏழரைச் சனி என்பர். சனி 12ல் சஞ்சரிக்கும் காலத்தை சிரசுசனி என்றும், ஒன்றில் சஞ்சரிக்கும் காலத்தை ஜென்மச்சனி என்றும், இரண்டில் சஞ்சரிக்கும் காலத்தை பாதச்சனி என்பார்கள்.

கோசாரரீதியில் சந்திரன் நின்ற வீட்டுக்கு 4ல் சனி வரும் காலத்தை அர்த்தாஸ்டமச் சனி என்பர்.

கோசார ரீதியில் சந்திரன் நின்ற வீட்டுக்கு எட்டில் சனி வரும் காலத்தை அட்டமத்துச் சனி என்பர்.

இவ்வளவு சிறப்புடைய சனிபகவான் திருக்கணிதப் பஞ்சாங்கப்படி மார்ச் மாதம் இருபத்தோராம் திகதி நள்ளிரவு பன்னிரண்டு மணி ஐந்து நிமிடத்துக்கு தனு ராசியில் இருந்து மகர ராசிக்குள் பிரவேசிக்கின்றார். இப்பிரவேசம் பற்றிய பலாபலன்களை நாளை ய இதழில் தொடர்ந்து நோக்கோகும்.

(வளரும்)

(12)

கொழும்பில் கைதான தமிழ் இளைஞர்களை அமைச்சர் செல்லச்சாமி சந்தித்தார்

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் கைதாகி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திரு. எம் எஸ். செல்லச்சாமி சந்தித்தார்

வெலிக்கடை சிறைச்சாலையில் 173 இளைஞர்களையும் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் 76 இளைஞர்களையும் சந்தித்து அவர்களது நிலை பற்றியும் அமைச்சர் அறிந்து கொண்டார்.

இவ் இளைஞர்களில் பெரும்பாலானோர் வடக்கு-கிழக்கு பகுதியிலிருந்து கொழும்பிற்கு பல்வேறு காரணங்களுக்காக வந்தவர்களென அவர்கள் தமக்குத் தெரிவித்ததாகவும் இது பற்றி தாம் அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரட்ணவுடன் தொடர்புகொண்டதாகவும் தெரிவித்தார்.

மேற்படிஇளைஞர்கள்மீதான வசாரணைகள் முடிவடைந்துள்ளதென்றும் குற்றமற்றவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்களென்றும் அமைச்சர் தம்மிடம் தெரிவித்ததாகவும் திரு. செல்லச்சாமி கூறினர். (சி)

உற்பத்தி அதிகரிப்பால் வெங்காயப் பூக்கள் வீதிகளில் வீசப்படுகிறது

(புதோலி)

வடமராட்சிப் பகுதியில் வெங்காயப் பூக்கள் குப்பைகளில் கொட்டப்படுவதுடன் நடுவீதிகளில் வாகனங்களால் நெரித்தும் நசித்தும் காணப்படுகிறது.

இப்பகுதியில் இம்முறை வெங்காயப் பயிர் மிக அதிகமாகப் பயிரிடப்பட்டுள்ளதால் வெங்காயப் பூக்களும் அதிகரித்துள்ளது.

அறுவடை செய்யப்படும் வெங்காயப் பூக்கள் கிலோ 75 சதமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வியாபாரிகள் அளவுக்கு அதிகமாக வெங்காயப் பூக்களைக் கொள்வனவு செய்யமுடியாமையினுல் பெருமளவு வெங்காயப் பூக்கள் வீணாக அழிக்கப்படுகின்றன.

விலைபோகாத வெங்காயப் பூக்கள் இவ்வாறு குப்பைகளில் கொட்டப்படுவதுடன் நடுவீதிகளிலும், தெருக்கரையோரங்களிலும் போடப்படுகிறது. (61)

19 - 2 - 1990

திங்கட்கிழமை

நவமி மாலை 3 ம. 31 நிமி. வரை கேட்டை அதிகாலை 1 மணி 47 நிமிடம் வரை இராகுகாலம் 2-20 முதல் 9ம 30 வரை சுபகருமங்களுக்கு ஏற்றதல்ல.

மேடம்: அநாவசிய தலையீடு வீண்விவாதம், பதட்ட மடைதல், அக்கறையின்மை, தொழில் பாதிப்பு

இடபம்: மறைமுகப்பிரச்னை குடும்பகலகம், அதிக செலவு, பிணவாட்டும். சகோதர உதவி.

மிதுனம்: பண்பான செயல், தொழில் லாபம், பணவசூல், பெண் வழி உதவி. மனச்சந்தோஷம்.

கடகம்: பகைவர் தொல்லை. புத்திரர் சோசம் குடும்பப் பகை, பொருட் செலவு, தொழில் லாபம்.

சிங்கம்- கடிதத் தொல்லை, தொழில் பாதிப்பு, அதிகாரிகள் சீற்றம். பணமூலமான கவலை.

கன்னி: எண்ணியது கைகூடும், பயண அலைச்சல், தொழில் முடக்கம், குடும்ப கலகம், தனிமை.

துலாம்: முத்தானசந்திப்பு, வெளியூர்பயணம், பணவரவு, நண்பருதவி, மங்களகாரியம்.

விருச்சிகம்; ஏமாற்றம், மாமனூர்பகை, பணக்கஷ்டம், குடும்பப்பிரிவு. கவலை.

தனுசு; வேலையாள் சகாயம் புதிய முதலீடு, பணப் புழக்கம், தாய்வழி உதவி.

மகரம்: தொழில் நஷ்டம், இராஜபயம், அதிகயோசனை, குடும்பத்தில் அமைதிகுன்றும், சோம்பல்.

கும்பம்: சபலபுத்தி, அதிகாரிகள் பாராட்டு, பணவரவு திருமண யோகம் ஆலய தரிசனம்.

மீனம்: பதவி மாற்றம், அரசியல் தாக்கம், தொழில் பாதிப்பு விவேகம் புதிய முதலீடு.

சங்காபிஷேகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அருள்மிகு தும்பளை முத்துமாரி அம்பாள் ஆலய சங்காபிஷேகம் இம்மாதம் 21-ம் திகதி நடைபெறுகின்றது. அன்றையதினம் சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி 'அம்மையே அருள் தருவாய்' என்னும் பொருள் பற்றி சமயச் சொற்பொழிவாற்றுவார். இதனையடுத்து அன்னதானமும்நடைபெறும்.

இவ்வாலயம் புதிதாக அமைக்கப்பட்டு அண்மையில் மஹாகும்பாபிஷேகமும் நடைபெற்றது. (52)

வீதிகள் சீர்கேடு

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதியிலுள்ள பிரதான வீதிகள் சில கடந்த பல வருடங்களுக்கு மேலாக திருத்தியமைக்க முடியாத நிலையில் உள்ளது.

இறுப்பிட்டி தம்பர்கடைச் சந்தி, ஆஸ்பத்திரிச் சந்தி, புங்குடுதீவு மகாவித்தியாலய வீதிபேன்ற வீதிகள் குன்றும் குழியுமாககாணப்படுகின்றன. இந்நிலைகளால் மக்கள் வீதிகளால் நடந்துசெல்ல முயாதுள்ளது. வாகனங்களும் வீதிகளை விட்டு அரச காணிகளுக்கூடாகச் செல்கின்றன. (101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பின்தங்கியவர்களை முன்னேற்றுவது செஞ்சிலுவைச் சங்கக் குறிக்கோள்"

(யாழ்ப்பாணம்)

"மிகவும் பின்தங்கிய கிராமங்களையும், வறிய மக்களையும் முன்னேற்றுவதையே செஞ்சிலுவைச் சங்கம் குறிக்கோளாகக்கொண்டுள்ளது. பின்தங்கிய பகுதிகளில் கைத்தொழிற்துறைகளை உருவாக்கி ஊக்குவிக்குவிப்பதன் மூலமே இதனைச் சாதிக்கமுடியும்."

இவ்வாறு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியான நியூசிலாந்தைச்சேர்ந்த செல்வி வென்டி வூட் வேட் பூநகரி புனர்வாழ்வு அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் முழங்காவிலில் ஆரம்பித்துவைக்கப்பட்ட வாழைநார் தும்பு உற்பத்திப் பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

முழங்காவில் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டிடத்தில் பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க உபதலைவர் திரு. தங்கராசா தலைமையில் இத்திறப்புவிழா நடைபெற்றது.

செல்வி வென்டி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "வாழை மரத்திலிருந்து தும்பு எடுக்கும் தொழிற்துறை இங்குள்ள மக்களுக்குப் புதியது. வாழைநார் தும்பு பட்டுநூலுக்குச் சமனானது. எப்பொருளையும் கழிவாக வீணுக்காமல் பயன்தரும் மூலப்பொருள்களாகப் பிரயோசனப்படுத்திக் கொள்ளவேண்டும்.

வாழை நாரிலிருந்து உருவாக்கப்பட்ட பாவனைப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளன."

செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளைச் செயலாளர் திரு. எஸ். சிவானந்தராசா செஞ்சிலுவைச்சங்க உபதலைவி திருமதி எஸ். சண்முகலிங்கம், பொருளாளர் திரு. கே பாலசுப்பிரமணியம், பூநகரி ப. நோ. கூ. சங்கக் கலவி உத்தியோகத்தர் திரு. என். கிருஷ்ணபவான் ஆகியோரும் பேசினர்கள்.

போதனாசிரியை திருமதி செல்வமணி வாழைமடல்களை வெட்டி வாழைநார், தும்பு உற்பத்தி செய்யும் செய்முறையைச் செய்துகாட்டினர். முப்பதுக்கும் அதிகமான பெண்கள் இப்பயிற்சியில் பயிற்சியாளர்களாகப் பங்கு பற்றுகின்றனர். (54)

திக்கம் வடிசாலைக்கு வழிநடத்தல் குழு

(யாழ்ப்பாணம்)

சிலகாலம் இயங்காமலிருந்த திக்கம் வடிசாலை பனம் பொருள் அபிவிருத்திச்சபை ஆதரவொடு மீளஆரம்பமாகியிருக்கிறது. வடிசாலைக்குத் தேவையான காகிதாதிகள், தட்டச்சு இயந்திரம், தளபாடம், உபகரணங்கள் யாவும் பனம் பொருள் அபிவிருத்திச்சபை வழங்கியதோடு புதிய காரியாலயமும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இதன் நிதி நிருவாகப் பொறுப்புக்களை பனம்பொருள் அபிவிருத்திச் சபை ஏற்றுக் கொண்டுள்ளது. வடிசாலைக்கென வழிநடத்தல் குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பனம் பொருள் அபிவிருத்திச் சபை முகாமையாளர் திரு. ஆர். சுகநேசன், மக்கள் தொடர்பு அதிகாரி திரு. வி.

(7ம் பக்கம் பார்க்க)

"சேவையாளர்களை மக்கள் கௌரவிக்கவேண்டும்!"

(வட்டுக்கோட்டை)

"கிராம வளர்ச்சிக்காகத் தொண்டாற்றுகின்ற சமூக சேவையாளர்களை மக்கள் ஒரு போதும் மறக்கக்கூடாது. அத்தகையவர்கள் உயிருடன் இருக்கும்போது பாராட்டு விழாக்கள் நடாத்தி அவர்களைக் கௌரவிக்க வேண்டும்".

இவ்வாறு வட்டுக்கோட்டை கிழக்கு சர்வோதய சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வலிமேற்கு சனசமூக நிலையங்களின் சமாஜச் செயலாளர் நா. க. தங்கரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

நிலையத்தலைவர் கி. தியாகராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நா. க. தங்கரத்தினம் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது: "கிராமங்கள் தோறும் உருவாக்கப்பட்டுள்ள சனசமூக நிலையங்கள் கிராமத்தினதும் கிராம மக்களினதும் முன்னேற்றத்திற்காகத் தொண்டாற்ற வேண்டும். இரவுப் பாடசாலைகளை உருவாக்கி மாணவ சமுதாயம் கல்வி, கலை, கலாசாரத்துறைகளில் அபிவிருத்தியடைய உதவவேண்டும். படித்துவிட்டு வீட்டில் இருந்து காலத்தை வீணே கழிக்கும் மாணவ மாணவிகளுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கும் வகையில் தொழிற்சாலைகளை அமைத்து பொருளாதாரத்தைப் பெருக்கும் பணிகளில் ஈடுபடவேண்டும்." (139)

வேலணை மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

வன் செயலினால் இடம் பெயர்ந்தவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மான புனர் வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாழும் மக்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் 90 வீதமான மக்கள் ஆயிரம் ரூபா, நாலாயிரம் ரூபா. வீடு கட்டுவதற்கான சலுகைக்கான அட்டைகள் பெற்றுள்ளதோடு நிவாரணமும் பெற்றுள்ளனர்.

இது பற்றி யாழ். செயலகத்தோடு தொடர்பு கொண்டபோது வேலணை உதவி அரசாங்க அதிபரிடம் இருந்து சம்பந்தப்பட்ட படிவங்கள் கிடைக்காத படியால்தான் தாமதத்துக்கான காரணம் எனத் தெரிவித்தார்கள்.

இவ் வேலைகளுக்குத் தாமதம் முகாம்கள் அண்மையில் இருந்தபடியால்தான் வேலைகளை ஒழுங்காக மேற்கொள்ள முடியவில்லையெனவும் கூறப்படுகிறது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரின் கீழுள்ள மக்களுக்கு மக்கள் வங்கி பிரதான கிளைமூலம் நிவாரணம் வழங்க ஏற்பாடாகியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

(எஸ்)

தட்டெழுத்து நூல் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

ஆண்டு 9 - 10 க்கான சுருக்கெழுத்து, தட்டெழுத்து, ஆசிரியர் மாணவர் கைநூல் நூலை 20-ம் திகதி வெளியிடப்படவுள்ளது.

சேவைக்கால ஆலோசகர் செல்வி நா. வேலுப்பிள்ளையினால் தயாரிக்கப்பட்ட இந்நூல் யாழ். கல்வித் திணைக்கள வணிகவள நிலையத்தின் 2ம், 3ம் வெளியீடாக வெளியிடப்படவுள்ளது.

இக்கைநூலை வர்த்தகக் கல்வி அதிகாரி திரு. சி. சிவராசா சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் வெளியிட்டு வைப்பார். (து)

சிவராத்திரி விழா

(பண்டத்தரிப்பு)

மாதகல் நுணசை அருள்மிகு முருகமூர்த்தி ஆலயத்தில் சிவராத்திரிவிழா எதிர்வரும் 23-ந் திகதி இரவு சிறப்பாக அனுஷ்டிக்கபடவுள்ளது.

அன்று மாலை தொடக்கம் கந்தபுராண விரிவுரைகளை வித்துவான் பொன் கந்தசாமி நிகழ்த்துவார்.

மாதகல் இந்துசமய விருத்திச் சங்கத்தினரின் பஜனை, பண்ணிசை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

(பண்டத்தரிப்பு)

சித்தன்கேணி சிதம்பரேஸ்வரர் சிவன் கோவிலில் எதிர்வரும் 23-ந் திகதியன்று இரவு மகாசிவராத்திரி உற்சவம் நடைபெறவுள்ளது.

பஜனை, இன்னிசை, பண்ணிசை போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளும் நான்கு ஜாமப் பூசைகளும் நடைபெறவுள்ளன. (72)

கல்விசார் ஆய்வு அரங்கு

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பிராந்திய தொல்லியல் மேலாய்வில் கிடைத்த தொல்பொருள் சின்னங்கள் ஒரு வரலாற்று ஆய்வு எனும் பொருள்பற்றிய கல்விசார் ஆய்வு அரங்கு இம்மாதம் 21ம் திகதி புதன்கிழமை யாழ் பல்கலைக்கழக பொருளியல் துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வரலாற்றுத்துறை பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்த அரங்கில் வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திரு. ப. புஷ்பரத்தினம் எழுதியமேற்குறித்த பிராந்திய ஆய்வுக்கட்டுரை வாசிக்கப்படும். (து)

நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

பனிப்புலம் அம்பாள் சன சமூகநிலையத்தின் 48ம் ஆண்டு வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் சிறப்பு நிகழ்ச்சிகளுடன் இடம்பெற்றது,

மேற்படி பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட நடப்பு வருட நிர்வாக உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு: தலைவர்; அ. முரளிதரன் உபதலைவர் ந. பாலசிங்கம், செயலாளர் க. பாஸ்கரன், உபசெயலாளர் பா. கேதீஸ்வரன், பொருளாளர் இ. அகிலன், கலைத்துறைத்தலைவர் சு. யாதவன், விளையாட்டுத்தலைவர் தி. கமலேஸ்வரன்.

மேலும் ஆறு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (56)

யாழ். கிளிநொச்சியில்

20 கிராமோதய சுகாதார நிலையங்கள் நிறுவப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் இருபது கிராமோதய சுகாதார நிலையங்கள் இவ்வாண்டு நிர்மாணிக்கப்படும். இதற்கான அனுமதியை சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது இவ்ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிட நிர்மாணச் செலவினங்களுக்கு அறுபது லட்ச ரூபா செலவிடப்படும்.

இத்தகவலை, யாழ்ப்பாணம் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி என். கனகசபை "ஈழநாடு"வுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தகவல் தருகையில், எண்பத்தொன்பதாம் ஆண்டு, நிர்மாணிக்கப்படவேண்டிய பத்து கிராமோதய சுகாதார நிலையங்கள் மார்ச் மாதம் முப்பதாம் திகதிக்கு முன் பூர்த்தி செய்யுமாறு திணைக்களம் கோரியிருப்பதாக தெரிவித்த அவர் இந்நிலையங்கள் மல்லாகம் குளமங்கால், புன்னாலைக்கட்டுவன், ஈவினை, அளவெட்டி வடக்கு, ஆனைக்கோட்டை சாவல்கட்டு அரியாலை, நாவலடி, உசன் ஆகிய பகுதிகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் நான்குமாக பத்து கிராமோதய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும். தொண்ணூறும் ஆண்டுநிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ள பத்து சுகாதார நிலையங்களும் அந்நிலையங்களை அமைப்பதற்கான காணிகள் சம்பந்தமான பூர்வாங்க வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டதும், கட்டிட நிர்மாண வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படவுள்ளதாக தெரிவித்தார். இதேவேளையில், புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள ஐந்து லட்ச ரூபா மந்திகை ஆதார வைத்தியசாலையிலும், தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையிலும் மலசலகூட வசதி செய்துகொடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார். (12)

"நாம் ஊனமுற்றவர்களை ஒதுக்கிவைக்கக் கூடாது"

(யாழ்ப்பாணம்)

"ஊனமுற்றவர்களை நாம் ஒதுக்கிவைக்கக்கூடாது. அவர்களும் சமூகத்தில் சுதந்திரமாக வாழவேண்டும்" என்று டாக்டர் எஸ். சண்முகலிங்கம் தெரிவித்தார்.

ஊனமுற்றோர் புனர்வாழ்வுக் கழக அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது; பாடசாலை பல்கலைக்கழகங்கள் உட்பட அனைத்திலும் ஊனமுற்றவர்களுக்கு சம உரிமைகள் வழங்கப்படவேண்டும். பொதுமக்களும் அவர்களுடன் ஐக்கியப்பட்டு வாழவேண்டும். அத்துடன் வேலைவாய்ப்பும் வழங்கப்படவேண்டும்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவுடன் சுண்டிக்குளி ஜெய்ப்பூர் தொழிற்சாலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஊனமுற்றோர் கழகத்தின் தலைவராக டாக்டர் எஸ். சண்முகலிங்கமும் மற்றும் 15பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

மக்கள் கடன் முகவர் கூட்டம்

(வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாணம் கன்னுதிட்டி மக்கள் வங்கிக் கிளையில் மக்கள் கடன் முகவராக (பிரஜா நய நியமன) நியமனம்பெற்றவர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டமொன்று இம்மாதம் 22-ம் திகதி பிற்பகல் 3 மணியளவில் மேற்படி மக்கள் வங்கித் கிளையில் நடைபெறவுள்ளது. (139)

கலை நிகழ்ச்சி

(வட்டுக்கோட்டை)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனமும், நாவாந்துறை கலைவாணி நல்லொழுக்கச்சங்கமும் இணைந்து நடத்தும் மதுவிலக்கு கருத்தரங்கும், கலைநிகழ்ச்சிகளும் இம்மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை நாவாந்துறையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்ச்சியின்போது சுழிபுரம் காளுவன் 'உதய சூரியன்' இசைக் குழுவினரின் 'யமனும் மதுவும்' என்னும் வில்லுப்பாட்டும் இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. 189)

யாழ். வைத்தியசாலை

சமயாசமய ஊழியர் தெரிவுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் சமயாசமய ஊழியர் தெரிவதற்கான ஏற்பாடு இடம்பெற்றுவருகிறது.

போதனா வைத்தியசாலை இம்மாதம் முதலாம் திகதி முதல் பரிசாரகர்களுக்கான பயிற்சி இடம்பெற்றுவருகிறது. இப் பயிற்சிக்குத் தெரிவாகியுள்ள நிரந்தர சாதாரண ஊழியர்களின் கடமையைக் கவனிக்கவே மேற்படி சமயாசமய ஊழியர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்படும் ஊழியர்கள், பரிசாரகர்களுக்கானபயிற்சிமுடிவுற்று அவர்கள் கடமை ஏற்கவருங் காலத்தில் இடைநிறுத்தம் செய்யப்படலாம் எனவும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சமயாசமய ஊழியர்கள் இடைநிறுத்தம் செய்யப்படுவதோ, தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தப்படுவதோ நிர்வாகம் இன்னமும் தீர்மானிக்கவில்லையெனவும் பரிசாரகர்களின் பயிற்சிமுடிவுற்றதும், இதுபற்றித் தீர்மானிக்கப்படுமெனவும் தெரியவருகிறது. (56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது இன்னிங்ஸில்

கனகரத்தினம் மகாவித்தியாலயம் கூடிய இடங்களைப் பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் கனகரட்னம் மகாவித்தியாலயத்திற்குமிடையில் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், சென்.ஜோன்ஸ் கல்லூரியைவிட கனகரத்தினம் மகாவித்தியாலயம் முதல் இன்னிங்சில் கூடிய ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென், ஜோன்ஸ் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. பிறஷாந்தன் 48 ஓட்டங்களைப் பெற்றார். நாதன் 3விக்கெட்டுகளையும், ரேணி, கிருஷ்ணகுமார் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும்வீழ்த்தினர்கள்.

கனகரத்தினம் மகாவித்தியாலயம் முதல் இன்னிங்சில் மொத்தம் 141 ஓட்டங்களைப் பெற்றது. காப்டன் ரேணி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 73 ஓட்டங்களைப் பெற்றார். முகுந்தன் 34 ஓட்டங்களைப் பெற்றார்.

சென். ஜோன்ஸ் கல்லூரி 2வது இன்னிங்சில் மிகவேகமாகத் துடுப்பெடுத்தாடி 2 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 134 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. சுரேஷ்குமார் 34 ஓட்டங்களையும், முரளியும், ஜோகேந்திரனும் ஆட்டமிழக்காமல் முறையே 36, 38 ஓட்டங்களைப் பெற்றனர்.

கனகரத்தினம் மகாவித்தியாலயம் 2வது இன்னிங்சில் ஆட்டம் முடிவடையும்போது 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 44 ஓட்டங்களைப் பெற்றது. இப்போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது, (வி)

திறப்பு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் கலை மற்றும் வர்த்தகத்துறையை ஊக்குவிக்கும் முகமாக மக்கள் குரல் தமிழ்ச்சேவை ஒலிபரப்பு நிலையம் திறந்துவைக்கப்பட்டது. கலை கலாசார ஆலோசகர் மற்றும் கிளிநொச்சி மாவட்ட கலை கலாசார வெளிக்கள உத்தியோஸ்தர் திரு. பொ. விவேகானந்தன் உட்பட பலர் இத்திறப்பு வைபவத்தில் உரையாற்றினர்கள். (83)

வலி. வடக்கில்

17,695 குடும்பங்களுக்கு மிகுதி நிவாரணம்!

(காங்கேசன்துறை)

வலி. வடக்குப் பகுதியைச் சேர்ந்த 17695குடும்பங்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணத்தில் மீதி 1000 ரூபா விரைவில் வழங்கப்படஉள்ளது.

மேற்படி குடும்பங்களுக்கு ஏற்கனவே 1000 ரூபா வழங்கப்பட்டிருந்தது. மீதி 1000 ரூபாவை வழங்குவதற்குரிய பணம் காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் விரைவில் இப்பணம் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பணக் கொடுப்பனவு குறித்த விபரங்கள் கிராம சேவை அலுவலர் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமும் அறிவிக்கப்படுமென வங்கி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்

வலி. வடக்குப் பகுதியைச் சேர்ந்த 2985 பேருக்கு உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நிவாரணம் 4000 ரூபா காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளையில் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (86)

பாடசாலைச்சொத்துக்களை பாதுகாப்பது அவசியம்

(யாழ்ப்பாணம்)

மாணவர்களிடையே கருத்து மோதல்கள் ஏற்படும்போது, பேச்சுவார்த்தைகள் மூலம் அதனை தீர்த்துக்கொள்ளலாம் ஆனால் கருத்து முரண்பாட்டை பாடசாலைக் கட்டிடங்களிலோ, பாடசாலை தளபாடங்களிலோ ஒருவரும் காட்டக்கூடாது, பாடசாலையின் சொத்துக்களைப் பாதுகாப்பது எதிர்கால சமுதாயத்துக்கு நாம் செய்யும் புனித கைங்கரியமாகும்.

இவ்வாறு யாழ் மாவட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் நாற்பத்தைந்து லட்ச ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய மூன்று மாடிக் கட்டடத்தைத்திறந்து வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

இவ்விழாவிற்கு கல்லூரி அதிபர் திரு. வே. பாலசுந்தரம் தலைமை தாங்கினர். யாழ்ப்பாணக் கோட்டக்கல்வி அதிகாரி திரு. கி. தியாகராசா கல்லூரிக் கொடியை ஏற்றி வைத்தார். செல்வி திலகவதி பெரியதம்பி உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது: ஒருபொருளை அழிப்பது சுலபம், ஆனால் அதனை ஆக்குவது கஷ்டம் ஒரு பொருளை அழித்து விட்டால் அதனை ஆக்குவதற்கு நாம் எவ்வளவோ கஷ்டங்களை எதிர்நோக்குகின்றோம். கடந்த காலங்களில் எமக்கு ஏற்பட்ட அழிவு போதும், இனியும் இப்படியான அழிவுகளை ஏற்படுத்திக் கொள்ளாமல் சுயசிந்தனையும், எதிர்காலத்தில் நம்பிக்கையும் வைத்து முன்னேறுவோம். இனியும் இப்படியான ஒரு அழிவை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது. இன்று திறக்கப்படும் கட்டிடம் இங்கு குழுமியிருக்கும் ஒவ்வொரு வருடைய சொத்தாகும். இதனை நல்ல முறையில் பேணி இக்கட்டிடத்தைப் பேணுவது உங்கள் கடமையாகும். இந்தக் கடமையில் இருந்து எவரும் விடுபடக்கூடாது என்றார்.

கல்வித்திணைக்களத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதிக்குப் பொறுப்பான பொறியியலாளர் திரு. கே. ரட்ணம் உரையாற்றுகையில்: இக்கல்லூரியின் அபிவிருத்திக்கு நிதி தேவைப்படுவதால் ஏதோ ஒரு வழியில் நிதியைப் பெற்றுக் கொடுப்பேன் என உறுதியளித்தார். (12)

சட்டத்தரணி சிவ. இராஜேந்திரனும் உரையாற்றினர்.

திரு. ஆர். ஆர். ஸ்ரீதரன் நன்றி கூறினர்.

பொதுமக்கள்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இவரது அயராத நேர்மையான சேவையினால் பொதுமக்கள் பெரும்பயனடைந்துள்ளனர். இளம் உத்தியோகத்தர்கள் பின்பற்றி நடக்கக்கூடிய செயல்திறமை மிக்கவர் என்றார்.

வட்டுக்கோட்டை மேற்கு கிராமசேவை அலுவலர் திரு. க. ஸ்ரீகரன் வரவேற்புரை நிகழ்த்தினர்,

சுழிபுரம் மேற்கு கிராம சேவைஅலுவலர் திரு.மு.தர்மதாசன் திரு சங்கரப்பிள்ளை கணேசன், பிரதம எழுதுவினைஞர் திரு. நடராசா நல்லநாதன், சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப்பொதுமுகாமையாளர் திருமதி மகேஸ்வரன், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ஸ்ரீரஞ்சன் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் பாராட்டுரை வழங்கினர்.

பதவி உயர்வு பெற்றுச் செல்லும் திரு. இ. பாலசிங்கம் பதிலுரை வழங்கும்போது ''உத்தியோகத்தர்கள் பொதுமக்களின் நலன் கருதித் தொண்டாற்றவேண்டும் என்றும் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் தொண்டு செய்வோருக்கு பதவி உயர்வுகள் தானாகவே வந்துசேரும் என்றும் கூறினர். (139)

திக்கம்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ஜி. தங்கவேல், கூட்டுறவு உத்தியோகத்தர் திரு. ரி. சபாரத்தினம், இணைப்பாளர் திரு. சிவபாலன், திரு. கி. சிவப்பிரகாசம், திரு. மு. குணரத்தினம், திரு. தி. அமிர்தநாதன் ஆகியோர் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

முதல் மாதம் ஆயிரம் கலன் மது வடிப்பதற்கு ஏற்பாடாகியுள்ள போதிலும் இரண்டாவது மாதம் அதன் இரட்டிப்பு மடங்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றும் எண்ணியுள்ளார்கள். (எஸ்)

மன்னர்ப்பகுதியில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படும்

(மன்னார்)

பேசாலை, சிலாவத்துறை, அடம்பன் ஆகிய இடங்களில் புதிய பொலிஸ் நிலையங்கள் விரைவில் திறக்கப்படவுள்ளன. இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்பொழுது மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

வன்னிப்பிரதேச பொலிஸ் அதிபர் திரு. எஸ். நவரட்ணராஜா மேற்கண்ட தகவலை வெளிட்டார்.

இதனால் பேசாலை, சிலாவத்துறை, அடம்பன் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் தத்தமது முறைப்பாடுகளை புதிய பொலிஸ் நிலையங்களில் முறையிடலாம் எனவும் தெரிவித்தார். (க)

கல்லூரிவிடுதி திறக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று வருடங்களாக மூடப்பட்டிருந்த யாழ். மத்திய கல்லூரி விடுதி மீண்டும் திறக்கப்பட்டு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடுதிக்கு கல்லூரி மேலகதிகாரிஉப அதிபர் கே. கந்தசாமி பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இப்போது விடுதியில் இருபத்தொரு மணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (12)

கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு செபமாலை மாதா சனசமூக நிலையம் நடாத்தும் சுகாதாரக் கருத்தரங்கு நிலையத் தலைவர் திரு. ஏ. ஈ. பீரிஸ்தலைமையில்நிலைய மண்டபத்தில் எதிர்வரும் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர் திரு. பொ. பேரின்பநாதன் உட்பட மற்றும் பலர் இதில் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார்கள்.

சகல மின் கம்பங்களுக்கும் மின்விளக்குகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபை நகரிலுள்ள சகல மின்கம்பங்களுக்கும் தெருவிளக்குகளைபொருத்தும் பணியை ஆரம்பித்துள்ளது. தற்போது ஸ்ரான்லி வீதியில் இப்பணி பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

கூடிய விரைவில் சகல வீதிகளுக்கும் தெருவிளக்கு பொருத்தப்பட்டுவிடும் என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. [12]

விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தெ.ப.பொ, கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் விசேட கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இதில் முக்கிய விடயமாகசமாசத்துக்கு காணியும், வாகனமும் கொள்வனவு செய்வது பற்றி ஆராயப்படவிருக்கிறது. கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. ரி. சபாரத்தினம் சிறப்புரை யாற்றவிருக்கிறார். (எஸ்)

பழைய மாணவர் கூட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இம்மாதம் 21ம் திகதி பிற்பகல் 2மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென்றும் இக் கூட்டத்தில் பழைய மாணவர்கள், அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் கல்லூரியின் பழையமாணவர் சங்கச்செயலாளர் அறிவித்துள்ளார். (52)

நிர்மாண பணிகளுக்கு நிதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளில் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள கனேடிய நலநிதியம் மூன்று கோடி ரூபாவை வழங்கியுள்ளது. இந்நிதியை எவ்வாறு பயன்படுத்துவது குறித்து விரைவில் தீர்மானம் அதற்கான நிதி அதிகாரிகள் தெரிவித்தனர். (12)

வ.பி.போ.ச டிப்போவுக்கு நேரடி தொலைபேசி வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க திணைக்களங்களுக்கும், கூட்டுத்தாபனங்களுக்கும் தொலை தொடர்பு திணைக்களம் தொலைபேசி வசதியை வழங்கியிருந்தும் வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் கோண்டாவில் தலைமையகத்துக்கு இதுவரை நேரடி தொலைபேசி வழங்கப்படவில்லை. இதனால் அவர்களது அன்றாடப் பணி பாதிக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (12)

நோய்த்தடுப்பு ஊசிஏற்ற நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள கோழிகளுக்கு நோய்த் தடுப்பு ஊசிமருந்து ஏற்றும் திட்டமொன்றை பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்டுவருகின்றது.

சங்கானை கால்நடை வைத்திய அதிகாரியினால் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் முற்பகலில் பண்டத்தரிப்பு கீரிமலை வீதியிலுள்ள நிலையத்தில் கோழிகளுக்கு நோய்த் தடுப்பு ஊசிமருந்து போடுவதற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இத்தினத்தில் ஆடு, மாடு ஆகியவற்றிக்கு ஏற்படும் நோய்களுக்கும் இந்த நிலையத்தில் வைத்தியம் செய்யப்படும் என்று பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. ச. செல்வரத்தினம் தெரிவித்தார்.

"பாடசாலையின் வளர்ச்சிக்கு நல்ல ஆளுமையுள்ள அதிபர் தேவை"

(யாழ்ப்பாணம்)

ஒரு பாடசாலையின் கல்வித் தொழிற்பாடுகள் பாடசாலை அமைந்துள்ள சமுதாயத்தின் தேவைகளையும் அபிலாசைகளையும் நிறைவேற்றக் கூடியதாக அமையவேண்டும். பாடசாலைக்கும் சுற்றுடலுக்கும் மிடையே நெருங்கிய தொடர்பும் ஒற்றுமையும் பேணப்படவேண்டும். அப்போதுதான் அந்தச்சூழலில் வாழும் மக்கள் பாடசாலையின் சகல தேவைகளையும் நிவர்த்தி செய்வதற்கு தோளோடு தோள் நின்று உழைப்பார்கள். பல்கலைக் கழகப் படிப்புத்தான் படிப்பு. மற்றையவை கல்வி ஆகா என்னும் கொள்கையை மாணவர்கள் கைவிடும் பொழுதுதான் மனிதவளங்களும் இயற்கை வளங்களும் மனித சமுதாயத்தின் சகல முன்னேற்றத்திற்கும் பொருந்தும் வகையில் விருத்தியடைகின்றன.

இவ்வாறு மானிப்பாய் மகளிர் கல்லூரி மலர் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய கல்லூரி அதிபர் திருமதி ச. கல்யாணசுந்தரேசன் கூறினர்கள்.

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் துணைமலர் வெளியீட்டு விழாவும், கல்லூரி தினம்-பரிசளிப்பு விழாவும் நடைபெற்றன. துணைமலர் வெளியீட்டு விழாவுக்கு லயன் எஸ். பத்மநாதனும், திருமதி பி. பத்மநாதனும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

கல்லூரி தினம் – பரிசளிப்பு விழாவிற்கு மருதனுமடம் கோட்டம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். கே. குலசேகரம், திருமதி டி. குலசேகரம்ஆகியோர் பிரதமவிருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இரு விழாக்களிற்கும் கல்லூரி அதிபர் திருமதி எஸ். கல்யாணசுந்தரேசன் தலைமை தாங்கினர். கல்லூரி வெள்ளி விழாக்கட்டடத்தை நிர்மாணிக்கும் பொறுப்பேற்றிருக்கும் பிரதம விருந்தினர் லயன் எஸ். பத்மநாதன் பேசுகையில் கல்லூரி வெள்ளி விழாக் கட்டடம் அதிபரின் நல்லமுயற்சி எனவும் அதற்குத்தேவையான நிதியைத் திரட்ட பழைய மாணவர் உதவிபுரியவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

பரிசளிப்பு விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தந்த திரு. ஆர். கே. குலசேகரன் பேசுகையில்; ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு நல்ல ஆளுமை உடைய அதிபர்கள் தேவை என்றும், பாடசாலை வளங்களை அதிபர்கள் நல்லமுறையில் பயன்படுத்தி உச்சப்பயனைப் பெறவேண்டுமெனவும், ஒரு பாடசாலையின் வீழ்ச்சிக்கு எவ்வாறு அதிபர் கண்டிக்கப்படுகின்றாரோ அதேபோன்று ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அதிபர் பாராட்டுக்குரியவராகின்றாரெனவும், சில அதிபர்கள் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஆசிரிய வளங்களையும் பௌதிக வளங்களையும் முறையிற் பயன்படுத்தத்தவறி விடுகின்றார்களெனவும் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய அடையாள அட்டை

விண்ணப்பம் செய்வோர் தொகை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்போர் தொகை தற்போது பலமடங்காக அதிகரித்துள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள 13 உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலிருந்தும் யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு ஒருமாதம் நாலாயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் வந்து கிடைப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலங்களில் நாட்டில் இடம்பெற்ற சம்பவங்களினால் தமது தேசிய அடையாள அட்டையை இழந்தவர்களும் 16 வயதைப் பூர்த்தி செய்தவர்களும், இதனைப் பெறுவதற்கு தினமும் விண்ணப்பித்து வருகின்றனர்.

இவ்விண்ணப்பங்களை ஆட்பதிவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் உடனுக்குடன் பரிசீலனை செய்து கொழும்புக்கு அனுப்பி வைக்கின்றனர்.

இவ்விண்ணப்பங்களுக்கு 30 நாளைக்குள் அடையாள அட்டை உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (71)

கிழக்கில்

அழிவுக்குள்ளான நூறு வீடுகளை புனரமைக்க அமைச்சு உதவி

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொத்துவில் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின்போது அழிவுக்குள்ளான வீடுகளிலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு புனருத்தாரண அமைச்சு நூறு வீடுகளைக் கட்டிக்கொடுக்கத் தீர்மானித்திருக்கிறது.

இடம்பெயர்ந்த ஒவ்வொரு குடும்பத்துக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் பதினைந்தாயிரம் ரூபாவை அமைச்சு வழங்கும். இந்த உதவித் தொகையைக் கொண்டு பாதிக்கப்பட்டவர்கள் அழிவுக்குள்ளான தமது வீடுகளைப் புனரமைத்துக் கொள்ளமுடியும்என அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (பெ)

திருட்டுப்போன பொருட்கள் பிரஜைகள் குழுவால் மீட்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறையிலுள்ள வீடுகளில் இருந்து திருடப்பட்டு விற்பனைசெய்யப்பட்டிருந்த பொருட்கள் பருத்தித்துறை பிரஜைகள் குழுவினரிடம் சிக்கிக்கொண்டது.

பருத்தித்துறையிலுள்ள சில வீடுகளிலிருந்து பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக அவ் வீடுகளின் உரிமையாளர்கள் பருத்தித்துறை பிரஜைகள் குழுவிடம் புகார் செய்திருந்தனர். பிரஜைகள் குழுவினர் இத்திருட்டுக்கள் பற்றி விசாரணைகளை நடாத்திய போது பல இரகசிய தகவல்கள் கிடைத்தன.

இதையடுத்து பருத்தித்துறை பிரஜைகள் குழுச் செயலாளர் திரு வீ. எஸ். மகேஸ்வரன், திரு. எஸ். காந்திதாஸன், திரு. ஆர். தங்கவேலாயுதம் ஆகியோரடங்கிய குழு இரவுவேளையில் சென்று களவாடப்பட்டு விற்பனைசெய்யப்பட்டிருந்த பொருட்களைக் கண்டுபிடித்துள்ளது. இதனையடுத்து விற்பனைசெய்யப்பட்டிருந்த திருட்டுப் பொருட்களை வைத்திருந்தவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். (52)

தற்கொலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள், பாதிப்படைந்தவர்கள் நிவாரணம் பெறன ஆவ செய்யவேண்டும்.

கிருமிநாசினி அருந்தி தற்கொலைசெய்தோருக்கும், இயற்கை மரணம் எய்தியவர்களுக்கும் வன்செயல் பாதிப்பு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கக்கூடாது. இதுகண்டிக்கத்தக்கதாகும்.

கிராம சேவையாளர்களும், உயர் அதிகாரிகளும் தவறுக நிவாரணப் பணம் கொடுத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றை மீளவும் ஒப்படைக்க வேண்டியும் வரும்.

மக்களிடமிருந்து கிராம சேவையாளர் மட்டுமல்லஎந்த உயர் அதிகாரிகளும் தவறுக நடந்தால் நடவடிக்கை எடுக்க வும்தயங்கமாட்டோம். கிராம சேவையாளர்கள் மக்களுக்கு தன்னலம் கருதாது சேவையாற்ற முன்வரவேண்டும் என்றார். (83)

வடமராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாவும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த முகாம்களுக்குள் தமது அனுமதியின்றி எவரும் செல்ல வேண்டாம் என்று விடுதலைப் புலிகள் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

வடமராட்சியிலிருந்து 18-ம் திகதி அமைதிப்படை வெளியேற்றம் நடைபெறுமென்று 'ஈழநாடு' ஏற்கனவே இம் மாதம் 15-ம் திகதி செய்தி வெளியிட்டிருந்தது. (51—61)

வடக்கு, கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்புவதிலுள்ள இடையூறுகள் குறித்து எல். ரி. ரி. ஈ. தெரிவித்துள்ள கருத்துக்கள் பற்றி அமைப்புகளிடம் எடுத்துரைத்தேன். இந்த அமைப்புக்கள் தெரிவித்த கருத்துக்கள் எல். ரி. ரி. யிடம் தெரிவிக்கப்பட்டது.

இந்த அமைப்புக்களிடம் தான் சிலயோசனைகளைத் தெரிவித்ததாகவும் ஈ. பி. ஆர். எல். எவ் பிரதிநிதிகள் திருமலை சென்று தமது தலைவர்களுடன் ஆலோசித்து விட்டு இந்த யோசனை பற்றிய இறுதி முடிவை இம் மாதம் 22-ம் திகதி சென்னைக்கு வந்து தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள் என்றும் தெரிவித்த அவர் ''இந்தப் பேச்சுக்களினால் வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு விமோசனம் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் பிரகாசமாகியுள்ளன'' என்றார். (து)

இப்பத்திரிகை 'ஈழநாடு' விமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு மாசி மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No. 49. Telegram; Eelanadu Telephone: 2291,

இன்று சந்திப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்தி சபை தூதுக்குழு, சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்தை இன்று அமைச்சு அலுவலகத்தில் சந்திக்கவிருக்கிறது. (52)

ஓடும் ரயிலில் ஏறமுற்பட்டவர் விபத்தில் சிக்கி காலை இழந்தார்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் ஓடியரயிலில் ஏற முயன்ற ஒருவர் கால் தடுக்கிக் கீழேவிழுந்து நெரியுண்டதால் தமது ஒருகாலை இழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன் தினம் மேற்படி விபத்தில் பாதிக்கப்பட்டவர் வேலணையைச் சேர்ந்த இராசநாயம் சிவபாலன் (வயது 40) என்பவராவர்.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:- ரயிலில் வந்தவர் தண்ணீர்தாக மேலிட்டால் கிளிநொச்சி ரயில் நிலையத்தில் தண்ணீர் குடிப்பதற்காக இறங்கிய போது ரயில் புறப்பட்டது. இதனால் அவர் அவசரமாக ஓடிவந்து ரயிலில் ஏறமுற்படும்போதே சனநெரிசல் காரணமாக கீழேவிழுந்து இவ்விபத்துக்குள்ளாகி காலை இழந்தார் எனத்தெரிவிக்கப்பட்டது. (56)

மண்டபம்முகாம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டம் பேசும்போது இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் பேசும் போது; மண்டபம் முகாமில் தற்போது தங்கியிருக்கும் 2,000 இலங்தைத்தமிழ் அகதிகள் இலங்கை திரும்பத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இன்று உடற்பயிற்சி போட்டி

(மட்டுவில்)

மட்டுவில் கொத்தணி பாடசாலைகள்மட்டத்திலான உடற் பயிற்சிப் போட்டிகள் இன்று 19-ம் திகதி மட்டுவில் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இந்தஉடற்பயிற்சிப்போட்டிகளில் பிரதம விருந்தினராக யாழ். கோட்டக் கல்வி அதிகாரி திரு. ரீ. துரைசிங்கம் கலந்துகொள்வார். (82)

யாழ். போதனை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் மேலானோர் இதுவரை விண்ணப்பித்திருப்பதாக வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிற்றாழியர் பற்றாக்குறை போல், லிகிதர்களுக்கும் பற்றாக்குறை நிலவுவதாகவும் இப் பற்றாக்குறையை போக்குவதற்காக அரசாங்கத்தின் அனுமதியுடன், லிகிதர் தெரிவுப் பரீட்சை ஒன்றைநடாத்தி பத்துப் பேரின பெயர்களை அரசாங்கத்தின் அங்கீகாரத்துக்கு அனுப்பியுள்ளதாகவும் அரசாங்கத்தின் அனுமதி கிடைத்ததும் இவ்வழியர்கள் சேவைக்கு அமர்த்தப்படுவார்கள் எனவும் இவ்வதிகாரி தெரிவித்தார். (வி)

கலப்படம் செய்வோர்மீது

நடவடிக்கை எடுக்க மேலதிகாரி நியமனம்

(காங்கேசன்துறை)

யாழ். மாவட்டத்தில் உணவு, மருந்துவகைகள் போன்றவற்றை பரிசோதனை செய்து கலப்படம் செய்வோர் மீதுகடும் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கலப்படம், மோசடி போன்ற புகார்கள் தொடர்பாக இதுவரை காலமும் பொதுச்சுகாதார பரிசோதகர்களே விசாரணை நடத்தி அவற்றை கண்டுபிடித்து அழித்து வந்தனர்.

ஆனால் தற்போது யாழ். மாவட்டத்தில் இவற்றை கண்காணிப்பதற்காக மேலதிகாரி ஒருவர் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். காங்கேசன்துறைப் பகுதி பொதுச்சுகாதார பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. ரி. மகாதேவன் இதற்குரிய பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் இக்கடமைக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது மேற்பார்வையில் யாழ். மாவட்டத்தில் உணவு, மருந்துவகைகள் போன்றவற்றில் கலப்படம் மோசடி செய்வோர் மீது தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

மல்லியம் ராஜகோபால்

காலமானார்

(சென்னை)

பிரபல தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளரும், இயக்குநரும், திரைக்கதை வசன கர்த்தாவுமான மல்லியம் ராஜகோபால் (55 வயது) நேற்று சென்னையில் காலமானார்.

ஜீவனாம்சம், சவாலேசமாளி உட்பட பல படங்கள் இவருக்கு பெரும் புகழைத்தேடிக் கொடுத்தன.

விபத்தில்

சாரதி மரணம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் நேற்று இடம் பெற்ற உழவு இயந்திர விபத்தொன்றில் உழவு இயந்திரத்தை ஓட்டிச் சென்ற சாரதி ஸ்தலத்திலேயே பலியானார்.

இருபாலையைச் சேர்ந்த முத்தையா எங்கரசன் (வயது 35) என்பவரே பலியானவராவார்.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணைக்காக ஆஸ்பத்திரி பிரேதச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (56)

கிழக்குமாகாண பல்கலைக்கழக அபிவிருத்தி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலுள்ள பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தை அபிவிருத்திசெய்ய தேவையான தொழில் நுட்ப உதவிகளை பிரிட்டிஷ் கவுன்சில் வழங்கவுள்ளது.

நியமனம்

(கிளிநொச்சி)

பரந்தன் கல்வி வலயத்திற்கான சேவைக்காலப் பயிற்சி ஆசிரிய ஆலோசகராக (கணிதம்) திரு. மா. தேவேந்திரன் கிளிநொச்சி கல்வித்திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் இவர் கிளிநொச்சி புனித பற்றிமாரே. க.வில் ஏழுவருடகாலமாக கணித ஆசிரியராக பணியாற்றிய பின்னர் பரந்தன் இந்து ம. வி. இல் தற்போது கடமையாற்றி வருகின்றார்.

மேற்படி பரந்தன் சுல்வி வலயம் பரந்தன், முரசுமோட்டை, பளை ஆகிய மூன்று கொத்தணிகளையும் உள்ளடக்கியதாகும். (83)

மா தட்டுப்பாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படாதிருக்க வழிவகுக்கும் நோக்குடன் தொடர்ச்சியாக மாவை தருவித்து களஞ்சியப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது காங்கேசன்துறைக்கு 1000 தொன் மாவுடன் வந்துள்ள ''மோர்ச்சன்ட் செரண்டிவ்'' கப்பலில் இருந்து மாவு இறக்கும் வேலைகள் நடைபெறுகின்றன.

இதைத் தொடர்ந்தும் கப்பல்களில் மாவு இங்கு வந்து சேருமெனவும் அதில் ஒருபகுதி களஞ்சியப்படுத்தப்படுமென வும் தேசிய கூட்டுறவுச்சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார், (86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org